Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with
prepayment with postal Reg. No. Try/041/2017 - 2019
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month

To

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திருப்பி அனுப்பவும்
**தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.**

## பதிப்பாசிரியர் குழு

1. **முனைவர் T.N. கோகுல்நாத் பாபு**, மாநிலத் தலைவர்
2. **பேரா. இ.பி. பெருமாள்**, மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. **பேரா. எம். பாலசுப்ரமணியன்**, மாநிலப் பொருளாளர்
4. **முனைவர் ந. மாரிசாமி**, மாநிலத் துணைத் தலைவர்
5. **முனைவர் ம.இராஜகோபால்**, மாநிலத் துணைத் தலைவர்
6. **பேரா. பார்வதி கோபாலன்**, மாநிலத் துணைத் தலைவர்
7. **பேரா. ஆர். பாக்கியலட்சுமி**, மாநில இணைச் செயலாளர்
8. **பேரா. S. சிவசண்முகம்**, மாநில இணைச் செயலாளர்
9. **பேரா. S. சந்திரா**, மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்

**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121, 94435 87233
Email : tanrectatrichy@gmail.com

# TANRECTA SPEAKS

Voice - XVII APRIL - 2019 Speech 10

# தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

TANRECTA

**பதிவு எண். 236/2000**



*பேரா. நரசிங்கம்*

## Tamil Nadu Retired College Teachers' Association

Newspaper Regn. No. TNBIL/2003/12746
Website: www.tanrecta.org
Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40

Muthukkalathi Street,
Tiruvallikkeni,
Chennai - 600 005

## தலைவர் பக்கம்

அன்புள்ள பேராசியர்க்கு, வணக்கம்.

மார்ச் 8ல் மகாராஷ்டிர மாநிலம் கோல்ஹாபூரில் AIFRUCTO வின் மாநாடு மிக எழுச்சியுடன் நடைபெற்றது. அனைத்து மாநிலங்களிலிருந்தும் பேராசிரியர்கள் வந்திருந்து சிறப்பித்தனர். ஒவ்வொரு மாநிலத்திலும் 7வது ஊதியக்குழு பரிந்துரையின் அடிப்படையில் ஓய்வூதிய திருத்தத்தை பற்றி மாநில பொறுப்பாளர்கள் எடுத்துரைத்தனர். முடிவில் அடுத்த மூன்றாண்டுக்கான பொறுப்பாளர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். நம்முடைய கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் பழைய நிலையே நீடிக்கிறது.

ஓய்வூதிய மாற்ற அட்டவணை மத்திய அரசின் நிதித்துறையில் நிலுவையில் உள்ளது.மாநிலங்கட்கு அனுப்பப்பட்டவுடன் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும். 14940யைப் பொறுத்த மட்டில் 10(எ)1ல் தன்னைப்போன்ற பணியில் சேர்ந்தவர்களுக்கு மட்டும் பயன்கிடைக்கின்ற வகையில் இயக்குனர் அவர்களின் ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்கூறியும் பயன் இல்லை. உயர்கல்வித்துறை செயலரிடம் இந்த ஆணை உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பொருந்துகின்ற வகையில் விரிவுபடுத்தி வெளியிட வேண்டுமென்று மனு கொடுத்திருக்கின்றோம்.

இந்தியா முழுவதும் தேர்தல் திருவிழா தொடங்கிவிட்டது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் நடைபெறும் தேர்தல் என்பதால் உலகிலுள்ள மக்கள் அனைவரும் ஆவலுடன் பார்க்கின்றனர். 90கோடி மக்கள் வாக்களிக்கவுள்ளனர். வருகின்ற ஐந்து ஆண்டுகளுக்கு நம் வாழ்க்கை முறையை தீர்மானிக்கும் தேர்தல் என்பதால், யார் நம்முடைய கோரிக்கைகளுக்காக நம்முடன் நிற்பார்கள் என சிந்தித்து தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று. ஆட்சிக்குழுவின் சார்பாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

நமது வாக்கு விற்பனைக்கல்ல, தகுதியானவர்களுக்கு மட்டுமே என உறுதிப்படுத்துங்கள். நன்றி.

---

**எனது முகவரி :** 43/3, மஹால் 2வது தெரு,
மதுரை – 625001. கைப்பேசி : 84282 54243

தோழமையுடன்
**T.N. கோகுல்நாத்பாபு**



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## பொதுச்செயலர் கடிதம்

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

வணக்கம். தற்போது தமிழகத்தில் பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்கள் தேர்தல் களம் மிகவும் சுறுசுறுப்படைந்துள்ளது. அணிக்காகவும் தனியாகவும் அரசியல் கட்சிகள் களம் கண்டுள்ளன. அரசியல் கட்சிகள் தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டுள்ளன. அவைகளில் நமக்கு பயனளிக்கும் வாக்குறுதிகளையும், நாட்டிற்கு பயனளிக்காத வாக்குறுதிகளையெல்லாம் நன்கு ஆராய வேண்டும். நம்மைப் பொருத்தவரையில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பது தான் முதன்மையானது. வாழ்நாளில் பெரும் பகுதியை அரசிற்காக செலவிட்டு ஓய்வு பெற்ற பின்பு வாழ்வதற்கு ஆதாரமாக ஓய்வூதியம் பயன்படுகிறது.

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் காலியிடங்கள் கோடிக்கணக்கில் உள்ளன. அவற்றை நிரப்பினால் நிர்வாகம் சீராக நடைபெறும். படித்து விட்டு கோடிக்கணக்கில் அரசுப்பணிக்கு காத்துக் கிடக்கின்றனர். அவர்கட்கு அரசுப் பணியை வழங்கினால் அவர்களது வாழ்வு சிறக்கும்; நாடும் மேம்பாடடையும்.

இந்நாட்டில் 80% பேர் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். நாட்டின் முதுகெலும்பாக இத்தொழில் உள்ளது. இதனை ஆதரித்து கடன் தள்ளுபடி செய்து, கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்து விற்பதற்கு வழிமுறைகள் ஏற்படுத்தி நாட்டை வளர்ச்சியுறச் செய்ய வாக்குறுதிகள் இருக்க வேண்டும்.

உள் நாட்டு தொழில்கள் வளரவும் ஏற்றுமதி அதிகரிக்கவும் ஏற்ற வகையில் தொழிற்கொள்கை இருக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்தியில் இடம் பெறாத தொழில்களுக்கு அந்நிய நாட்டு அனுமதிகள் வழங்க வேண்டும். உள்நாட்டு தொழிலை அழித்து வெளிநாட்டு முதலாளிகள் வாழ வழி வகுக்கக் கூடாது.

அடுத்த மாதம் ஏப்ரல் 18 ம் தேதி வாக்களிக்கப் போவதற்கு முன் மேற்கூறியவற்றை பரிசீலித்து வாக்களியுங்கள். ஆனால் வாக்களிக்கத் தவறாதீர்கள். வாக்குரிமை நமக்கான உரிமை. தவறாமல் வாக்களிக்க வேண்டியது நமது கடமை. நன்கு பயன்படுத்தவும்.

இம்மாதம் 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் கோல்காபூரில் நடைபெற்ற அகில இந்திய AIFRUCTO மாநாட்டில் கலந்து கொண்டோம். செயற்குழுவால் வகுத்தளிக்கப்பட்ட அமைப்பு விதிகள் திருத்தம் மற்றும் தீர்மானங்கள் ஆகியனவற்றை சிறப்பாக செயற்குழு மற்றும் பொதுக்குழு ஆகியனவற்றில் சமர்ப்பித்து வலியுறுத்தினோம். அத்துடன் நமது மாநில செயற்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்களும் ஒருவர் தவிர மற்றவர்கள் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் பேரா. B. பார்த்த சாரதி பொதுச் செயலாளராகவும் பேரா. கோகுல்நாத் பாபு தேசிய செயலாளராகவும் பேரா. வி.சுவாமிநாதன் மண்டலச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது மிகவும் மகிழ்ச்சியானதாகும். அவர்கட்கு நமது அமைப்பின் வாழ்த்துக்கள்.

இம்மாதம் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் சென்னையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உயர்கல்வித்துறை செயலாளர், கல்லூரிக்கல்வி இணை இயக்குநர், கருவூலக் கணக்குத்துறை இயக்குநர்கள் இருவர் ஆகியோரை சந்தித்து செயற்குழு தீர்மானங்களைத் தந்து பேசியுள்ளோம். தேர்தல் பணிகளின் காரணமாக நிர்வாகப் பணிகள் தேக்கமடைந்துள்ளன.

பணிகளைத் தொடர்வோம், பயன்களைப் பெறுவோம்!

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி - 636705.
தொலைப்பேசி 04342 - 230397 செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள
**இ.பி. பெருமாள்**
பொதுச்செயலர்

## மாநிலப் பொருளாளர் அறிக்கை

29.03.2019, ஏப்ரல்

இனிய பேராசிரியர்களுக்கு, வணக்கம். நமது கழக உறுப்பினர்களுக்கு தமிழ் வருடப்பிறப்பு நல்வாழ்த்துக்கள். நமது கழகத்தின் கிளைகளிலிருந்து மார்ச்-2019ல் பெறப்பட்ட உறுப்பினர் கட்டணம், செய்திமடல் நிதி அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதி, கஜா புயல் வெள்ள நிவாரண நிதி, கட்டிடநிதி, AIFRUCTO ஆயுள் சந்தா மற்றும் ஆண்டு சந்தா பற்றிய விபரங்கள்.

**தஞ்சாவூர்** கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 3 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.450/- ம், செய்திமடல் நிதியாக ரூ.600/-ம் பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக ரூ. 1500/-ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ.1500/-ம், AIRUCTO ஆண்டு சந்தாவாக ரூ75/-ம் என ஆக மொத்தம் ரூ.4125/- பெறப்பட்டுள்ளது. (Prof. M. கமலா, Dr. R. கண்ணன், Dr. R. ராஜேந்திரன்). 2வது முறையாக 2017-18க்கு ஒருவர், 2018-19க்கு மூவர் என 4 உறுப்பினர்களின் கட்டணம் ரூ600ம் AIFRUCTO ஆண்டு சந்தா ரூ.100/-ம், 2018-19க்கு 1 புதிய உறுப்பினரின் செய்திமடல் நிதியாக ரூ.200/-ம், (Dr. P.முருகையன்), 2018-19க்கு அறக்கட்டளை நிதி, 2 உறுப்பினர்களுக்கு ரூ.1000/-ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ.1000/-ம் என ஆக மொத்தம் ரூ.2900/- பெறப்பட்டுள்ளது. (Dr.P.முருகையன், Prof. M. ஜெயம்).

**திருவாரூர்** கிளைச் செயலரிடமிருந்து கஜா புயல் நிவாரண நிதியாக 6 உறுப்பினர்களிடமிருந்து ரூ3000 கட்டிட நிதியாகவும், 5 உறுப்பினரிடம் ரூ.22,000/- பெறப்பட்டது.

**திருச்சி** கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 104 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.15,600/-ம், AIFRUCTO ஆயுள் சந்தா (Prof. விக்டர் லூயிஸ் அந்துவான்) அவர்களுக்காக ரூ. 1000/-ம் என ஆக மொத்தம் ரூ.16,600/- பெறப்பட்டுள்ளது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**இராமநாதபுரம்** கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 5 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 750/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா 5 உறுப்பினர்களுக்கு ரூ.125/-ம், கஜா புயல் நிவாரண நிதியாக ரூ. 2500/- என ஆக மொத்தம் ரூ.3375/- பெறப்பட்டுள்ளது.

**விழுப்புரம்** கிளைச் செயலரிடமிருந்து 2018-19 க்கு 5 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.750- பெறப்பட்டுள்ளது.

**புதுக்கோட்டை** கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 55 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 8250/- பெறப்பட்டுள்ளது.

**ஈரோடு கிளைப்** பொருளரிடமிருந்து 18 வது மாநில மாநாட்டு பங்களிப்பு தொகையாக மாநில அமைப்புக்கு ரூ.51,550/ம், 18 வது மாநில மாநாட்டு மலரின் தொகை ரூ. 13,300/ம் பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதிக்கும் பெறப்பட்டுள்ளது.

**வேலூர் கிளைப்** பொருளரிடமிருந்து 2018-19க்கு 1 உறுப்பினரின் கட்டணம் 150/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா 1 உறுப்பினர்க்கு ரூ.25/-ம், கூடுதலாக ரூ. 25/-ம், பேரா. S. கோட்டீஸ்வரன் அவர்களிடமிருந்து கட்டிட நிதியாக ரூ.5000/- ம் என ஆக மொத்தம் ரூ.5200/ பெறப்பட்டுள்ளது.

**செய்யாறு கிளைப்** பொருளரிடமிருந்து 2018-19 க்கு ஒரு உறுப்பினர் கட்டணம் (Dr. S. Jesuraj) ரூ. 150/-ம், 2 உறுப்பினர்களிடமிருந்து கட்டிட நிதியாக தலா. ரூ.5000/ வீதம் ரூ.10000/- ( Prof. R. V. ரகுராமன், திருமதி. சரசுவதி அம்மாள், W/o Prof. A. சங்கர சுப்பிரமணியன்) என ஆக மொத்தம் ரூ.10150/- பெறப்பட்டுள்ளது.

**விருதுநகர் கிளைச்** செயலரிடமிருந்து 2018-19க்கு Dr.S.பானுமதிக்காக AIFRUCTO ஆயுள் சந்தா ரூ.1000/-ம், கட்டிட நிதியாக கிளை உறுப்பினர்களிடமிருந்து 2 ஆம் தவணையாக ரூ. 133400/- என ஆகமொத்தம் ரூ. 134400/- பெறப்பட்டுள்ளது. (உறுப்பினர்களின் விபரம் பட்டியலில்).

**ஈரோடு கிளைப்** பொருளரிடமிருந்து 9 உறுப்பினர்களின் கட்டிட நிதியாக ரூ.50000/- பெறப்பட்டுள்ளது.(உறுப்பினர்களின் விபரம் பட்டியலில்).

**கோவை -நீலகிரி கிளைப்** பொருளரிடமிருந்து, 2 ஆம் தவணையாக கஜா புயல் நிவாரண நிதிக்கு உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.50000/ஆகும்.

**கன்னியாகுமரி** கிளைப் பொருளரிடமிருந்து 2016-17 க்கு இருவர், 2017-18 க்கு 5 பேர், 2018-19 க்கு 38 உறுப்பினர்கள் என மொத்தம் 45 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.6750/ம், கட்டிட நிதியாக கிளையிலிருந்து ரூ.2000/ம், AIFRUCTO ஆயுள் சந்தா 7 உறுப்பினர்களிடமிருந்து தலா ரூ.1000/ வீதம் ரூ. 7000/ம், (M/s Angel Johnson, Dr. Malliha M. Amarnath, Dr. M. Rashi

**Dr. C. Pragasa Nithyavathy, P.John Thangathurai, Dr. K.Mathavan Pillay, S.Nagaraja Pillai)** 8 புதிய உறுப்பினர்களின் செய்திமடல் நிதியாக ரூ.1600/-ம் **(Dr. M. Rashi, Dr.C. Pragasa Nithyavathy, P.John Thangathurai, Dr. V. Krishnan, R. Sivaramalingam, P. Murukan, Dr. K. Mathavan Pillay, S. Nagaraja Pillai)** என ஆக மொத்தம் ரூ.17,350/- பெறப்பட்டுள்ளது.

**தூத்துக்குடி கிளைச்** செயலரிடமிருந்து 2018-19க்கு 35 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.5250/-ம், **AIFRUCTO** ஆண்டு சந்தா 16 உறுப்பினர்களுக்கு ரூ.400/- ம் என ஆக மொத்தம் ரூ. 5650/- பெறப்பட்டுள்ளது.

**சென்னை கிளைப்** பொருளரிடமிருந்து 2017-18க்கு 30 உறுப்பினர்கள், 2018-19க்கு 70 உறுப்பினர்கள் என 100 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 15000/-ம், 2018-19க்கு 100 உறுப்பினர்களுக்கு **AIFRUCTO** ஆண்டு சந்தா ரூ. 2500/-ம், பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக 13 உறுப்பினர்களுக்கு ரூ.6500/-ம், கழக வளர்ச்சி நிதியாக 13 உறுப்பினர்களுக்கு ரூ 6,500 **(M/s G. Gowthaman, Leela Ramakrishnan, R.Thevanathan, M. Muthusamy, Esther Surendranath, N. Palani Andavar, C.R. Seshan, S.M. Mohamed Nasardeen, K. Selvaraj, Jaya Muniasamy, R. Kuselan, T.V. Manimaran, V. Thirungnasambandam)**

2018-19க்கு **AIFRUCTO** ஆயுள் சந்தா 26 உறுப்பினர்களுக்கு தலா ரூ.1000/வீதம் ரூ. 26000/-ம், (M/s. S. Aruna, V.Hema, Vatsala Narayanasami, Leela Ramakrishnan, M.Muthusamy, A.Jeyam, Nirmala Natarajan, Vallikannu, T.Sargunam Stephen, T. Sivakami, S. Selvaraj, S.M. Mohamed Nasaradeen, S.Rajamanickam, S.Vaitheeswaran, S. Navaneetha krishnan, Jaya Muniasamy, S.Kamala, R. Hemalatha Renganathan, Dilshad Begum, T.V. Manimaran, R.Thevanathan, C.R.Seshan, K.Selvaraj, P.Thara, G.Sureshdhas, P. Kuselan)

2018-19 க்கு செய்திமடல் நிதியாக 24 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.4800/ம் (M/s P. Joseph Sathiaraj, J.Samuel Cornelius, V.J.Philip, K.Ramalingam, R.Thevanathan, S.Vaidehi, D.Azhagarasan, A.Sreenivasulu, N.Amudha, P.Thilaka Bai, P.Varadharajan, S.Kemasari, K.Ajitha Doss, V. Lilly, H.Mohamed Salahudeen, M. Vasantha, J. kausalya, Nirmala Palanivelu, K. Selvaraj, M. Rajagopalan, P. Kuselan, Prema chandran, T.S. Natrajan, P.R. Srinivasan)

கட்டிட நிதியாக உறுப்பினர்களிடமிருந்து 2 ஆம், மற்றும் 3 ஆம் தவணையாக ரூ.1,80,000/ என ஆக மொத்தம் ரூ. 2,41,300/- பெறப்பட்டுள்ளது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



கழக அமைப்புக்கு கட்டிடம் வாங்க நிதி அளித்தோர்.பட்டியல் கிளை வாரியாக

| வரிசை எண் | கிளையின் பெயர் | கிளை உறுப்பினரின் பெயர் | அளித்த தொகை | கிளை மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | விருதுநகர் | (பட்டியல் இணைப்பில் உள்ளபடி) 89 உறுப்பினர்கள் | 2/19<br>3/19 | 5,00,000/- |
| 2. | கன்னியாகுமரி | ....... | 2000 | 2000 |
| 3. | செய்யாறு | Prof. R.V. ரகுராமன்,<br>Tmt. சரஸ்வதி அம்மாள் | 5000<br>5000 | 10000/- |
| 4. | வேலூர் | Prof.S. கோட்டீஸ்வரன் | 5000 | 5000 |
| 5. | ஈரோடு | Prof.P.பரமசிவம் | 10000 | |
| | | Prof.D. ஆறுமுகம் | 5000 | |
| | | Prof. R. தருமசேகரன் | 5000 | |
| | | Prof. N. கோகுல சந்தான கிருஷ்ணன் | 5000 | |
| | | Prof. M.கோவிந்தசாமி | 5000 | |
| | | Prof. C.மணியன் | 5000 | |
| | | Prof. M.K.நாகப்பன் | 5000 | |
| | | Prof. S.M.ராமச்சந்திரன் | 5000 | |
| | | Tmt. சரஸ்வதி மணியன் | 5000 | 50,000 |
| 6. | சென்னை | (பட்டியல் அடுத்த மாத இதழில்) | 1,80,000 | 1,80,000 |
| 7. | திருவாரூர் | Prof. C.நாராயணசாமி | 5000 | |
| | | Prof. A.அய்யாறு | 5000 | |
| | | Prof. S.சிதம்பரம் | 5000 | |
| | | Prof. S.கனகசுந்தரம் | 5000 | |
| | | Prof. S.கலியபெருமாள் | 2000 | 22000 |

(கட்டிட நிதி அளித்தோர் பட்டியல் தொடரும்)

| | |
|---|---|
| சென்ற மாதம் வரை | 21,90,700 |
| 3/19 மாதம் நிதி அளித்தோர் | 4,02,400 |
| ஆக மொத்தம் | 25,93,100 |

## Building Fund Donors
## TANRECTA, VIRUDHUNAGAR UNIT

1. Prof. G. Jeyalakshmi-11000; 2. Prof. Kurian Mathew-7000; 3. Prof. K. Ponnammal-7000; 4. Dr. Prof. K. Rajeswari-7000; 5. Prof. M. K. Amalrajan- 7000; 6. Prof. G. Lakshmithai- 7000; 7. Dr. T. Baskaran- 7000; 8. Dr. M. Jeyaraj - 7000; 9. Dr. Rengasamy - 7000; 10. Prof. D. Chandrasekaran- 7000; 11. Prof. P.S. Vivekanadan - 7000; 12.Dr. V. Kandasamy- 7000;13. Prof. M. Ramachandran- 7000; 14. Prof. P.J. Joseph - 7000;15. Prof. S. Subramanian - 10000; 16. Prof. S. Vimaldevi- 10000; 17. Prof. R. Veerapandian- 8000; 18. Prof. N. Jeyakumar- 7000; 19. Prof. N. Vijayalakshmi- 7000; 20. Prof. K. Ramdoss- 7000; 21. Prof. G. Radiga- 7000; 22. Prof. K. Kalasamy- 7000; 23. Prof. B. Sathasivan -7000; 24. Dr. B. Jeyaraman-7000; 25. Prof. R. Jeyamaran

-7000; 26. Prof. Avadaithai Jeyaraman -7000; 27. Prof. V. Harirajan -8000; 28. Prof. S. Karuppiah - 7000; 29. Prof. N. Mohan 7200; 30. Prof. M. Umarani - 7200; 31. Dr. N. Inbamani - 7000; 32. Dr. K. Rajasekaran -7000; 33. Prof. N. Chidambaram -7000; 34. Major. Dr. S. Elangovan -7000; 35. Prof. A. V. Daniel Durairaj - 7000; 36. Dr. P. C. Ganesan -7000; 37. Prof. R. Veluchamy -7000; 38. Dr. S. Manickavel -7000; 39. Prof. S. Saraswathy -7000; 40. Prof. J. Dharmaraj -7000; 41. Prof. K. Vasanthi -7000; 42. Dr. K. Rajkumar -7000; 43. Dr. N. Ponmathi -7000; 44. Prof. S. Murali -7000; 45. Prof. P. K. Sasidharan - 7000; 46. Prof. N. Vijayalakshmi - 7000; 47. Prof. V. Saraswathi -7000; 48. Dr. A Kanchanadevi - 7000; 49. Prof. S. Mariappan - 7000; 50. Prof. P. S. Balasubramanian - 7000; 51.Dr. M. Arunachalam -7000; 52. Prof. S. Sarojini - 8000; 53. Prof. N. Kannagi -7000; 54. Prof. D. Kathambarajan - 7000; 55. Prof. R. Surendran -7000; 56. Dr. A. Shunmugasundaram -7000: 57. Prof. A. Umadevi - 7000; 58. Prof. R. B. Gnanajothi -7000; 59. Prof. M. Shunmugathai -7000; 60. Prof. J. Thennammal -7000; 61. Prof. S. Natrajan -7000; 62. Prof. Jebakani Balammal -7000; 63. Prof. Mary Chandra Vadhana -7000; 64. Prof. M. Rajasekaran -7000; 65. Dr. P. N. Kamala -7000; 66. Dr. Murugeswari -7000; 67. Prof. S. Alagappan -7000; 68. Prof. C. Saroja W/o. N. Chennappan -5000; 69. Dr. A. Thuraisamy -7000; 70. Dr. S. Alagianambi -6000; 71. Prof. G. Jeyaraj -7000; 72. Prof. R. Santhakumari -7000; 73.Dr. K. M. Kathiresan -7000; 74. Dr. T. Bhupathi Ganesh -7000; 75. Prof. V. Kalyana sundaram -7000; 76. Prof. R. Pandian -7000; 77. Prof. K. Solaisamy -7000; 78. Prof. B. Nagalakshmi -7000; 79. Dr. N. Annandam -7000; 80. Prof. P. Natesan -7000; 81. Prof. Pitchaikani Prabakaran -7000; 82. Dr. S. Sevaga Pandian -7000; 83. Dr. E. K. R. Nagarajan- 7000; 84. Prof. K. Ayyavu - 7000; 85. Dr. S. Parimala -7000; 86. Dr. C. Vinayaga Sundaram -7000; 87. Prof. N. Arjunan -7000; 88. Prof. V. Mallikarjunan -7000; 89. Dr. C. Amutha -7000.

**TOTAL AMOUNT: 6,33,400/-**

2018-19 நிதியாண்டு இந்த மாதத்தோடு முடிவதால், கிளைப் பொறுப்பாளர்கள் சந்தா தொகையை பெற்று அனுப்புமாறும், சந்தா அளிக்காத உறுப்பினர்களின் பட்டியலை கிளைப் பொறுப்பாளர்கள் பொதுச் செயலருக்கும், எனக்கும் அனுப்புமாறும், சந்தா அளிக்காதவர்களுக்கு அடுத்தமாத இதழ் கண்டிப்பாக அனுப்ப இயலாது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

25.2.2019இல் திருச்சியில் நடைபெற்ற செயற்குழு தீர்மானத்தின்படி, சென்னை, கோவை, கன்னியாகுமரி, கும்பகோணம், மதுரை, ராமநாதபுரம், வேலூர், பொள்ளாச்சி ஆகிய கிளைகள் 2018-19 உறுப்பினர் கட்டணங்களை முழுமையாக செலுத்தவில்லை. எனவே கிளைப் பொறுப்பாளர்கள் மீதமுள்ள உறுப்பினர்களிடமிருந்து கட்டணங்களைப் பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர் கட்டணம் செலுத்தாதவர்களின் பட்டியலை உடன் எனக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கிளைப் பொறுப்பாளர்கள் தங்களது தொகைகளை அனுப்ப வேண்டிய முகவரி : இந்தியன் வங்கி, திருவானைக்கோவில், திருச்சி **SB A/c No. 935236819, IFSC Code : IDIB000S110.**

**எனது முகவரி :** 3/175, G.R.T. நகர், அன்புடன்
திருவாரூர் - 610 001. செல் : 9443976222 பேரா.**M.பாலசுப்பிரமணியன்**
E.mail : indirabalu1@gmail.com மாநிலப் பொருளர்



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## ALL INDIA FEDERATION OF RETIRED UNIVERSITY AND COLLEGE TEACHERS' ORGANISATIONS [Regd]

(348 F MUTA Gardens, Pasumalai., Madurai-625004, Tamilnadu)

### CIRCULAR - MARCH 2019- No.1 14-3-2019

Professors, Greetings.

Let me thank you all for having made our statutory conference a grand success by attending in large number, by taking part in the discussion in full sprit and by making the election unanimous. Delegates to the tune of about 200 from Andhra Pradesh, Assam, Gujarat, Haryana, Karnataka, Maharashtra, Odisha, Punjab, Puduchery, Tamilnadu, Telangana, Uttar Pradesh, West Bengal and from Annamalai University Pensioners' Association participated in the conference.

Prof.Dr. Maya, Ex. Pro Chancellor from Kolhapur inaugurated the conference and also delivered International Women's Day speech. Prof. Arunkumar, General Secretary, AIFUCTO gave special address. Prof, Mrinmoy Bhattacharji, Prof.K.K.Theckedath, Prof. Vijay Kumar, Prof. Asok Barman and Prof.Meinya., M.P., our Patrons also delivered special addresses. Our NEC requested Prof.Tarun Patra, Ex.President of AIFUCTO to be a Patron of AIFRUCTO and he has agreed to it. Further NEC requested him to be the Election Officer and he agreed magnanimously and conducted the election. Further he delivered the Valedictory address.

General council welcomed the newly affiliated Associations, namely Federation of University and College Retired Teachers' Association in Karnataka (FUCRTAK) and Puduchery Retired Government College Teachers Welfare Association (PUREGOCOTA). They all welcomed the decision of Society of Retired Aided College Teachers of Kerala and the forum of retired Teachers of AKGCTA and Forum of Retired University Teachers of Kerala to get affiliated to AIFRUCTO. Amendments to our constitution were presented by Prof. Gopal Nanda, the convener of that subcommittee and they were approved unanimously by the General Council. [After getting that document from Prof. Nanda, it will be circulated and printed in the net issue of AIFRUCTO NEWS.]

**NEW TEAM OF OFFICE BEARERS ELECTED FOR THE PERIOD 2019 TO 2022:**

PRESIDENT: Prof. Dr. Ramsingh, VICE PRESIDENTS: 1. Prof. Dr. Sadananda Battacharji, 2. Prof. Dr. A.Pulliah, 3. Prof. Dr. Mahendra Odharia, 4.Prof. Dr. Niranjan Padhy, 5. Prof. Dr. Sangameshwar, 6. Prof. Dr. S.S.Chauhan,

7. Prof. Dr. Ch. Pitchiah, 8. Prof. Dr. Venkatramana Reddy, 9. Prof. Dr. Pramode Chandra Chakrabvarti, 10. Prof. Dr. Ramachandrappa, 11. Prof. Dr. Kranti Jejurkar, GENERAL SECRETARY: Prof.Dr. B.Parthasarathy, NATIONAL SECRETARIES:, 1. Prof.Dr. Gopal Krishna Nanda, 2. Prof.Dr. Halesh, 3. Prof.Dr. Satish Mahapatra, 4. Prof.Dr. Sredhar Reddy, 5. Prof.Dr. Rajendra Singh Pawan, 6. Prof.Dr. T.N. Gokulnath Bapu, 7. Prof.Dr. S.A.Bojgar, 8. Prof.Dr. S.Krishna, TREASURER: Prof.Dr. J.N. Shukla, ZONAL SECRETARIES: 1. Prof.Dr. V.Swaminathan, 2. Prof.Dr. K.K.Sharma, 3. Prof.Dr. Jaswindar Singh Virk. I assure on behalf the whole team that we will work hard to resolve the issues of retired professors in all states throughout India and for implementing the decisions taken by AIFRUCTO.

**ON REPORTS**

State leaders presented their state reports and issues they are handling at their state level during the discussion.

The House approved the General Secretary's Repot and Treasurer's Report as they were without modification. However as requested by members, It is planned to get the Pension Revision Orders from states where the revision is done and those details will be sent to all states at the earliest. The report of Chief editor was also approved by the house though there were suggestions on publishing the AIFRUCTO NEWS. These suggestions were referred to Secretariat for discussion and final approval and implementation. [The report of Accounts with all latest details of Payments will be sent immediately after receiving it from our treasurer.]

**ON RESOLUTIONS:**

1. Resolved to authorize the Secretariat a) to fill up the vacant posts as and when needed b) to finalise nominations for National Legal Cell c) to take decisions on the suggestion given by General Council members regarding our Bulletin and also nominate Editorial board, place of Publication of the Bulletin taking in to consideration the offer given by Karnataka and other matters including 'Life subscription for the Bulletin and d) to take steps to form a platform including all retired teachers and employees Associations/ Federations in India to demand 'OLD PENSION SCHEME FOR ALL'
2. Resolved to request all units of AIFRUCTO to send an appeal to all states where the Pension revision has not been implemented yet, demanding immediate pension revision on the basis of the Pension revision order issued by MHRD. [ The MODEL letter will be sent to all Associations and office bearers soon.]



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



3. Resolved to request all units of AIFRUCTO to send appeal to C.M. of PUNJAB, CHANDIGARH, MEGHALAYA and Himachal Pradesh to extend Pension Rules for teachers and Employees retired from Government Aided Institutions. [The MODEL letter will be sent to all Associations and office bearers soon.]
4. Resolved to thank shivaji university teachers' association for having hosted this conference and for having made very good arrangements to make all delegates feel comfortable during their stay and for the arrangements made to make the conference a grand success.
5. Resolved to approve all the resolutions moved by different state associations on their state issues. [These resolutions will be sent to the respective State Government authorities soon].

**Resolutions moved by TANRECTA, Tamilnadu:**

1. Resolved to request the Govt. Of India to release the concordance Table to the pensioners and those who retired from colleges and Universities.
2. AIFRUCTO urges the MHRD to withdraw the amendment Bill on Higher Education
3. The Conference requests the Govt. Of India to take necessary steps to implement the UGC pay scales to all states and unitary states immediately.
4. Many of the states are in financial crunch. So we request the Central Government to sanction 100 % grant to states so as to enable to implement UGC pay scales in toto.
5. It is learnt that the MHRD has planned to introduce graded Autonomy to Higher educational Institutions. It will create chaos and the gradation will seriously affect the Higher education system.
6. Centralization of education will seriously affect the standard and system of education. So as to enable education to reach all it should b brought to the state list.
7. Retired teachers and professors are not wage earners. They are getting only living money. So they should be exempted from Income tax.
8. UGC has imposed many new conditions. It is not suited to the rural and semi urban colleges and teachers. So it is requested to withdraw the new conditions.

The leaders have added the following also: " So as to cover the professor and people retired from 2006 to 2015.--- 19 years of service or Associate professor, formula I is not covered –Option I ---- To election manifesto of political parties ---- 50% of pension revision --- Private University bill to be withdrawn."

**Resolution moved by ARCTA, Assam:**

"This statutory conference of AIFRUCTO notes with concern at the move of the Union Government to pass the Citizenship Amendment Bill, 2016. The bill has been passed in the Lok Sabha already. It could not be passed in Rajya Sabha. The said bill which proposes to grant citizenship to foreign nationals of certain neighboring countries on the basis of religion, is not only anti-constitutional but goes against the interests of the country. Under these circumstances, this conference urges upon the Union Government to withdraw the bill immediately."

**Resolution moved by Prof. Dr. Sudhakar Mankar:**

"The Govt. Of Maharashtra has already issued Govt. Order granting pension for pre 1-1-2016 retirees. But teachers retired after 1-1-2016 are not granted pension as per the 7th pay commission. Hence the Govt. of Maharashtra shall issue pension order for teachers retired after 1-1-2016."

**Resolution moved by Annamalai University Pensioners' Association (Tamilnadu):**

1. Resolved to request the University authorities to implement the revised 7th UGC pay scale based pension to the retired teachers of Annamalai University immediately, as per the UGC stipulated date of implementation, 1-1-2016.

2. Resolved to request the University authorities to settle the payment of full pension benefits to the retired teachers of Annamalai University who retired since 2013, the benefits being gratuity, provident fund, surrender of earned leave, Commutation etc.

Resolution moved by Prof. Halesh, our National Secretary on behalf of Association of University & college Retired Teachers in Karnataka:

1. We resolved to take up the responsibility of Bulletin Published Quarterly from AIFRUCTO by charging 50% of the publishing cost. [This will be finalised at the next Secretariat meeting.] At the end of the conference it was accepted by all to create a group in 'WHATSAPP' for AIFRUCTO. Members, Leaders of State Associations and the Office bearers are requested to send their whatsapp number to the General Secretary so that the group can be formed and communications can be sent through it so that time and money can be saved. [ Prof. Ramachandrappa, our newly elected Vice president has come to my rescue by forming that group in the name"AIFRUCTO MEMBERS". This is the team work.] Please send your whatsapp numbers and become member of that group immediately.

With regards,

**(B.Parthasarathy)**, Gen.Secretary.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**அகில இந்திய ஓய்வு பெற்ற பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு - AIFRUCTO**

மராட்டிய மாநிலம் கோல்காபூர், ஜோப்ரா ஹோட்டல் 07.03.2019 அன்று மாலை 5 மணிக்கு தேசிய செயற்குழுக் கூட்டம் அமைப்பின் தலைவர் பேரா. ராம்சிங் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தலைமையுரையாற்றினார். அதன் பின் பொதுச் செயலாளர் முனைவர் பார்த்தசாரதி மாநாட்டு பொதுக்குழுவில் சமர்ப்பிக்க உள்ள அறிக்கையை சமர்ப்பித்து விரிவாகப் பேசினார். அதனில் சர்வதேச நிலை, தேசிய அளவிலான ஓய்வூதியம் தொடர்பான நிலை, நடுவண் அரசிடம் தீர்க்கப்படாமல் உள்ள கோரிக்கைகள் பற்றி கூறினார். அதற்கு செயற்குழு ஒப்புல் தந்தது. பின்னர் அமைப்பு விதிகள் திருத்தக் குழு தலைவர் அமைப்பு விதிகள் பற்றிய திருத்தங்களைக் கூறினார். அவற்றின் மீது விவாதம் நடைபெற்றது. பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஓய்வூதிய Anomoly பற்றி குழுவினது அறிக்கையை முனைவர் சுப்புராவ் சமர்ப்பித்தார். AIFRUCTO NEWS காலாண்டு இதழ் பற்றிய விபரங்களையும் சிக்கல்களையும் ஆசிரியர் பேரா. இ. பி. பெருமாள் கூறினார்.

**அகில இந்திய மாநாடு கோல்காபூர் - பொது மாநாடு**

08.03.2019 அன்று காலை 10.00 மணிக்கு கோல்காபூர் ஜோப்ரா ஓட்டலில் அகில இந்திய மாநாடு தொடங்கி நடைபெற்றது. மாநாட்டிற்கு அமைப்பின் தலைவர் ராம்சிங் தலைமை தாங்கினார். காஷ்மீரத்தில் தீவிரவாதிகள் தாக்குதலால் உயிரிழந்த 40 வீரர்கட்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டின் அமைப்பாளர் பேரா. மங்கர் வரவேற்புரையாற்றினார். பின்னர் பொதுச்செயலாளர் மாநாட்டு அறிக்கையை பொதுக்குழுவிற்கு சமர்ப்பித்தார். பின்னர் அமைப்பு விதிகள் திருத்தம் பற்றிய அறிக்கையை அதன் தலைவர் அளித்தார். அடுத்த மூன்று ஆண்டுகட்கான பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் குழுவை அருண் பத்ரா தலைமையில் பணியாற்ற தீர்மானிக்கப்பட்டது. பின்னர் மாநாட்டில் துணை வேந்தர் அவர்களின் நேர்முக உதவியாளர் மாயா பண்டிட் அவர்கள் மாநாட்டினை தொடங்கிவைத்தும் சர்வதேச மகளிர் தினம் குறித்தும் பேசினார். சிறப்பு விருந்தினரான AIFUCTO பொதுச்செயலாளர் முனைவர் அருண் குமார் சிறப்புரையாற்றினார். பேரா. மிருண்மாய் பட்டாச்சார்யா, பேரா.மெயின்யா, பேரா.தெக்கடத், B.விஜயகுமார், பேரா. அசோக் பர்மன் ஆகியோர் மாநாட்டினை வாழ்த்திப்பேசினர். பின்னர் நடைபெற்ற பொதுக்குழுவில் பொதுச்செயலாளர் இயக்க அறிக்கையை சமர்ப்பித்தார். அதே போன்று அமைப்பு விதிகள் திருத்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. மாநில வாரியாகவும் சங்கங்கள் சார்பாகவும் சென்ற மாநாட்டிற்குப் பின் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகளை கலந்து கொண்ட மாநில பொறுப்பாளர்களாலும் சங்க பொறுப்பாளர்களாலும் பேசி சமர்ப்பித்தனர். பொருளாளர் வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். பின்னர் தேர்தல் பற்றிய முடிவுகள் தேர்தல் அமைப்பாளர் அருண் பத்ரா அறிவித்தார். அனைத்து பதவிகட்கும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் மாநாட்டின் தீர்மானங்கள் நிறைவேறின. இறுதியில் மாநாட்டிற்கு வந்து கலந்து கொண்டவர்கட்கு பேரா. S.K. பட்டில், M.C.U.T.A தலைவர் நன்றி கூறினர்.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



### ஓய்வூதியம் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் நேர்காணல்

அடுத்து வரும் மாதங்களில் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் நேர்காணலுக்கு செல்ல வேண்டும். நேர்காணலுக்கு செல்லும் போது 1. PPO Book 2. வங்கிக் கணக்கு புத்தகம், 3.வருமானவரி அட்டை , 4. ஆதார் அட்டை ஆகியவை கொண்டு செல்லவும்.

நேரில் செல்ல முடியாதவர்கள் வாழ்வு சான்று உரிய படிவத்தினை பூர்த்தி செய்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் ஒப்பம் பெற்றும் பதிவுத் தபாலில் அனுப்பவும். மற்றொரு வாய்ப்பு E சேவை மையம் சென்று பதிவு செய்து கொள்ளலாம். Pensioners Portal app அரசால் தொடங்கப்பட்டுள்ளது. Password உருவாக்கி நமக்கான ஓய்வூதிய விபரம், குடும்பநல பாதுகாப்பு விபரம், உறுப்பினர் அட்டை ஆகியன பயன் பெறலாம். இதனில் முன்னோடியாக சிதம்பரம் கிளை செயல்பட்டுள்ளது. பாராட்டுக்களை தெரிவிக்கிறோம்.

### அறிவிப்பு

2018 - 2019ஆம் நிதியாண்டு 31.3.2019 அன்றுடன் முடிவடைகிறது. தற்போது உறுப்பினர் கட்டணம் செலுத்தாமல் 1000க்கு மேற்பட்டோர் உள்ளனர். இதனை ஒழுங்குபடுத்த 25.2.2019 அன்று நடைபெற்ற செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி 2018-2019ஆம் நிதியாண்டும் அதற்கு முன்னரும் தொடர்ந்து உறுப்பினர் கட்டணம் செலுத்தாதவர்கட்கு TANRECTA SPEAKS அனுப்புவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே கிளைச் செயலாளர்கள் உறுப்பினர் கட்டணம் செலுத்தாதவர்கள் பட்டியலை உடனடியாக அனுப்பவும். அவர்கட்கு மாதாந்திர இதழை அனுப்பாமல் இருக்க உதவிகரமாக இருக்கும். உறுப்பினர்கள் கிளைகளில் செலுத்த வேண்டிய உறுப்பினர் கட்டணம் உட்பட நிதியினை தவறாது செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இ.பி. பெருமாள்,** பொதுச்செயலாளர்

---

### AIFRUCTO மாநாடு

AIFRUCTO மாநாடு 8.3.2019 அன்று மகாராஷ்டிரா மாநிலம் கோல்பூரில் நடைபெற்றது. அதனில் AIFRUCTO பொறுப்பாளர்கட்கான தேர்தல் நடைபெற்றது. அதனில் போட்டியின்றி பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

துணைத் தலைவர்கள் :
1. முனைவர் சதானந்தா பட்டாச்சார்யா
2. முனைவர் ஏ. புல்லையா
3. முனைவர் மகேந்திரா ஒதாரியா
4. முனைவர் நிரஞ்சன்பதி
5. முனைவர் சங்கமேசுவரர்
6. முனைவர் எஸ்.எஸ். சௌகன்
7. முனைவர் சி. பிச்சையா
8. முனைவர் வெங்கட்ரமண ரெட்டி
9. முனைவர் புரோமோத் சந்திர சக்ரவர்த்தி
10. முனைவர் ராமசந்திரப்பா
11. முனைவர் கிராந்தி ஜெஜீகர்





பொதுச் செயலாளர் : முனைவர் B. பார்த்தசாரதி

தேசிய செயலாளர்கள் :
1. முனைவர் கோபால் கிருஷ்ண நந்தா
2. முனைவர் ஹாலோத்
3. முனைவர் சதீஷ் மகாபத்ரா
4. முனைவர் சிரிர் ரெட்டி
5. முனைவர் ராஜேந்தர் சிங் பவன்
6. முனைவர் T.N. கோகுல்நாத் பாபு
7. முனைவர் S.A. போஜகர்
8. முனைவர் S. கிருஷ்ணா.

மண்டல செயலர்கள் :
1. முனைவர் V. சுவாமிநாதன்
2. முனைவர் K.K. சர்மா
3. முனைவர் ஜஸ்விந்தர் சிங் விர்க்

பொருளாளர் : முனைவர் சுக்லா.

அனைவருக்கும் தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**இ.பி. பெருமாள்,** பொதுச்செயலாளர்

---

### தொடர் நடவடிக்கை

20.3.2019 மற்றும் 21.3.2019 ஆகிய நாட்களில் சென்னையில் தலைவர், பொதுச்செயலர் மற்றும் பொருளாளர் ஆகியோரால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 20.3.2019 அன்று பிற்பகல் தலைமைச் செயலகம் உயர்கல்வித்துறை மற்றும் நிதித்துறையில் ஓய்வூதியப் பிரிவு ஆகியவற்றில் அலுவலர்களிடம் கோரிக்கைகளின் நிலைபற்றி பேசி விபரங்கள் தெரிந்து கொண்டோம். 21.3.2019 அன்று காலை 11.00 மணிக்கு கருவூல கணக்குத் துறை இயக்குநர் அலுவலகம் சென்று இரண்டு இணை இயக்குநர்கள் சந்தித்தோம். மாநில செயற்குழுவின் தீர்மானங்கள் தந்து பேசினோம். அப்போது பல புதிய செய்திகள் தெரிவிக்கப்பட்டன. பணியினின்று ஓய்வுபெற்றவுடன் ஓய்வூதியம் பெறும்போது அவர்கள் மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் இணைப்பதுடன் அவர்கட்கு மருத்துவமனையில் மருத்துவம் பார்க்கத் தேவையான சான்று வழங்கிவிடுவதாகக் கூறப்பட்டது. மேலும் சான்றிதழ் அல்லது அட்டை பெற Pensioners portal என்ற வலைதளத்தில் சென்று தேவையான தகவல்களை பெறலாம். சென்ற நிதியாண்டில் பெற்ற ஓய்வூதிய விபரங்கள் அனைத்தும் பெறலாம். அதற்கு Password create செய்தல் வேண்டும்.

கருவூலக் கணக்குத் துறை அனுப்பிய செயல்முறைகள் பற்றிய விபரங்களையும் பெற்று பின்னர் உயர்கல்வித்துறை செயலரை சந்தித்து செயற்குழுவின் தீர்மானங்களை தந்தோம். 1. இது நாள் வரை அரசு உதவிபெறும் கல்லூரிகளின்று ஓய்வூதியத் திருத்தம் கிடைக்கப் பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ளாத இணை இயக்குநர்கள் பற்றியத் தீர்மானம். 2. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்க்கும் ரூ 14,940/- வழங்கிட வேண்டியது 3. 2006 முதல் 2016 வரையில் ஓய்வு பெற்றவர்க்கான Concodant Table வழங்க வேண்டுதல். 4. TANRECTA பொறுப்பாளர்கள், மற்றும்

உறுப்பினர்களை பழிவாங்கும் வகையில் இடமாற்றம் செய்தும் 17E தந்தும் உள்ளதை கண்டித்தும் மீண்டும் முன்னர் பணியாற்றிய கல்லூரிக்கு மீண்டும் இடமாற்றம் செய்யவும் குறிப்பாணைகளைத் திரும்ப பெறவும் வலியுறுத்திய கடிதங்கள் தரப்பட்டன.

பின்னர் கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகம் சென்றோம். இயக்குநர் வெளியூர் சென்றிருந்ததால் இணை இயக்குநரை சந்தித்து செயற்குழுத் தீர்மானங்களைத் தந்தோம். அங்கே தேங்கியுள்ள கோரிக்கைகள் பற்றி பேசி விரைந்து நடவடிக்கை கோரியுள்ளோம்!

1. 2008-09 ஆம் கல்வியாண்டில் பணியாற்றியவர்க்கு வழங்கவேண்டிய ஊதிய நிலுவை.
2. பட்டதாரி பயிற்றுனர், விளக்குனர்க்கான ஊதிய மாற்றம்
3. நமது அமைப்பு சமர்ப்பித்த Concodant Table அனுப்பக் கோருதல்.
4. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றி 1980 முதல் 1985 வரையில் ஓய்வு பெற்றவர்க்கு உயர்வூதியம் 14940 வழங்கக் கோருதல், TNGCTA பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களை பழிவாங்கும் வகையில் செய்யப்பட்டுள்ள இடமாற்றம், மற்றும் குறிப்பாணைகளை திரும்பப் பெற கோரியது போன்றன.

அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றி 2006க்கு முன் ஓய்வு பெற்றவர் ஓய்வூதியத் திருத்தம் செய்யாமல் உள்ள மண்டல இணை இயக்குநர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் ஓய்வூதியத் திருத்தம் நிலுவையிலுள்ள கல்லூரி முதல்வர்கள் பற்றியெல்லாம் விவாதிக்கப்பட்டது.

**இ.பி. பெருமாள்,** பொதுச்செயலர்

---

**Proceedings of the Director of Collegiate Education, Chennai - 600 006**

**Rc.No.49012/J1/2018 Dated : 04-03-2019**

Present : Dr. (Tmt.) R. Sarumathi, M.Sc., M.Phil., B.Ed., Ph.D.,

Sub : Collegiate Education Department - Revision of Pension to the retired Teachers of Government / Government Aided Colleges, governed by the UGC, prior to 01-01-2016-Concordance Table - Government letter received - copy communicated - Reg.

Ref : Government Letter (2D) No.4 Higher Education (H1) Department Dated 04.02.2019.

******

The Government letter cited, wherein Revision of Pension to the retired Teachers of Government / Government Aided Colleges, governed by the UGC, Prior to 01-01-2016 Concordance Table (Ready Reckoner) have been issued, is enclosed for necessary further action. The Regional Joint Directors are requested to communicate the same to the Secretary / Principal of the Government Aided Colleges coming under their Region. The receipt of the proceedings may be acknowledged.

**Director of Collegiate Education**



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## கிளைச்செய்திகள்

### கிருஷ்ணகிரி கிளை

எங்கள் கிளையின் இம்மாதக் கூட்டம் 09.03.2019 மாலை 5. மணி அளவில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஆரியபவன் ஹோட்டலில் நடைபெற்றது. பேரா. B.R வெங்கடேசகுப்தா, கிளைத்தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார். கிளையின் செயலாளர் அனைவரையும் வரவேற்றார். அத்தோடு பொதுச் செயலாளர் அவர்கள் இம்மாதம் அனுப்பிய சுற்றறிக்கையையும் சமர்ப்பித்தார்.

கிளைத்தலைவர் அவர்கள் இவ்வாண்டு உறுப்பினர் கட்டணத்தை ஏப்ரல் மாதக் கூட்டத்தில் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். அத்துடன் தோராய வருமான வரி பிடித்தம் பற்றி ஏப்ரல் மாதத்தில் எழுதிக் கொடுக்கவும் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

இம்மாதம் தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடும் பேரா. S. அமலராஜன் மற்றும் பேரா. C. ரெங்கராஜு அவர்களுக்கும், தன் திருமண நாளைக் கொண்டாடும் பேரா. S. சுந்தரம் அவர்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

சிற்றுண்டி மற்றும் தேநீருக்குப் பின் கிளைப்பொருளாளர் பேரா. வேலுசாமி அவர்கள் நன்றி கூறினார். இத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

கட்டடநிதி: கிருஷ்ணகிரி-கிளையிலிருந்து ரூ. 5000 வழங்கிய பேராசிரியர்கள் :- 1. பேரா. K. வேலுசாமி, 2.பேரா. K. ரெங்கசாமி, 3.பேராசிரியை P. ராஜம்மாள், 4.பேரா. வெங்கடசேகுப்தா, 5. பேரா. S. மூர்த்தி, 6. பேரா. முனைவர் N.C ஞானசேகரன், 7. பேரா. K.M. அப்துல் சத்தார், 8. பேரா. K. முனுசாமி,9. பேரா.M. அந்தோனியப்பன், 10. பேரா. K.M. மணி, 11. பேரா.D. ஜோசப் தாஸ், 12. பேரா. M. சங்கரன், 13. பேரா. S. சேதுராம கிருஷ்ணன், 14. பேரா. M. அற்புதமணி, 15. பேரா. பயாஸ் பாட்ஷா, 16. பேரா. ந. அமலநாதன், 18. பேரா. L.வசந்தசிங், 19. பேரா. M. சிவசுப்ரமணியன் ஆக மொத்தம் 95,000 கட்டிட நிதி வழங்கியுள்ளனர்.

**மா. அற்புதமணி**

கிளைச் செயலாளர், கிருஷ்ணகிரி

### மதுரை கிளை

19.03.2019-அன்று காலை 10.30 மணிக்கு நடைபெற்ற மார்ச் 2019-மாதப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு, கிளைத்தலைவர் பேரா.C.K. மதுரம் தலைமை தாங்கி, அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் 75 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பேராசிரியர்கள் **சேக் அப்துல் காதர், K.P ராதாகிருஷ்ணன், மதுரை, Dr. S. பரிமளா** விருதுநகர் மற்றும் புல்வாமில், காஷ்மீர் தீவிரவாதிகளின் தாக்குதலில் மரணமடைந்த இந்திய வீரர்கள் அனைவருக்கும் உறுப்பினர்கள் 2-நிமிடம் எழுந்து நின்று, அமைதிகாத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த மாதம் பிறந்த நாள் கொண்டாடும் பேராசிரியர்களின் பெயர்களை, இணைச் செயலாளர் பேரா. S. சேதுராக்காயி வாசிக்க, உறுப்பினர்கள், அவர்களுக்கு வாழ்த்துக் கூறினர். அவர்கள், கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு, மரியாதை செய்யப்பட்டனர். பல்வேறு பணிநிமித்தம் காரணமாக, தொடர்ந்து நம்

இயக்கங்களில் பங்கேற்க முடியாததால், இப்போது, பேரா.R. நெடுமாறன் அவர்கள், இச்சங்கத்தில் தன்னைப் புதிதாக இணைத்துக் கொண்டு, செயல்பட உறுதியளித்தார். 27-02-2019 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்ட அறிக்கையை, இணைச்செயலாளர் பேரா. S. சேது ராக்காயி வாசித்தார்.

கிளைச் செயலாளர் பேரா. G. ராமமூர்த்தி, தனது அறிக்கையில், சென்ற மாதம் மேற்கொண்ட சங்க நடவடிக்கைகளை, உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார். 13-02-2019- அன்று முதல், நம் மண்டலத்திற்கு, நிரந்தரமாக, முனைவர் பாஸ்கரன், கல்லூரிக் கல்வி இணை இயக்குநராக நியமிக்கப்பட்டது பற்றியும், மூட்டா பேரிக்கத்தின் நிறுவனத் தலைவர்களில் ஒருவரான பேரா. தர்மராஜன் 84-வது பிறந்த நாளை, சிவகங்கையில் கொண்டாடப்பட்டது பற்றியும், அதில் மூட்டா தலைவர்கள் கலந்து கொண்டது பற்றியும் தெரிவித்தார். நம் கிளையிலிருந்து ஆர்வமிக்க உறுப்பினர் பேரா. L.சுப்பிரமணியன் அவர்கள், இராஜபாளையத்திலிருந்து, டெல்லி வரை பேருந்து மூலம் பயணம் செய்து கல்வி பாதுகாப்பு பேரணியில் பங்கு கொண்டது, பெருமைப்படக் கூடிய செயல் என்றார்.

25.02.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு முடிவுகள் பற்றியும், அக்கூட்டத்தில், கிளைச்செயலாளர் பேரா. G. ராம மூர்த்தி, AIFRUICTO வின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது பற்றியும் கூறப்பட்டது. வரும் 19-03-2019- அன்று, ஓய்வூபெற்ற பேராசிரியர்களுக்கு, புதிய ஓய்வூதிய விகிதம் நிர்ணயம் செய்வதில், தங்களது முழு ஒத்துழைப்பை நல்கிய கல்லூரிக்கல்வி இணை இயக்குநர், சம்பளக்கணக்கு அதிகாரி மற்றும் மாவட்டத் கருவூல அதிகாரி அவர்களுக்கும் பாராட்டு விழா நடத்துவது என்றும், அவ்விழாவினை சிறப்பாக நடத்திட, தன்னார்வமாக பொருளுதவி செய்பவரிடம் பொருள் பெற்றும், பணிகள் நடைபெற குழுக்கள் அமைத்தது பற்றியும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. கோலாப்பூரில் நடைபெற்ற AIFRUCTO மாநாட்டில், மதுரை கிளை சார்பாக, 31 உறுப்பினர்கள் குடும்பத்துடன் பங்கெடுத்தது பற்றி குறிப்பிடப்பட்டது. இதுதான், அதிகபட்சமான உறுப்பினர்கள் கலந்துகொண்ட கிளையாகும். 14.03.2019 அன்று நடக்கவிருந்த மாவட்ட கருவூல அதிகாரிகள், ஓய்வூதியர்களின் குறைதீர் கூட்டம், தேர்தல் காரணமாக ரத்து செய்யப்பட்டது உறுப்பினர்களின் கவனத்திற்கு, கொண்டு வரப்பட்டது. பொருளாளர் முனைவர் A. மனோகரன், சென்ற மாத வரவு-செலவு கணக்கைச் சமர்ப்பித்தார். கோல்காபூர் மாநாடு, இனிய சுற்றுலாவாகவும் அமைந்தது பற்றியும் பேரா. R. வள்ளி, அழகுற எடுத்தியம்பினார். TANRECTA செய்திகளை, மாநிலத் தலைவர் பேரா.TN. கோகுல்நாத் பாபு கூற, AIFRUCTO செய்திகளை, பொதுச் செயலாளர் முனைவர் B. பார்த்தசாரதி எடுத்துக் கூறினார்.

**தீர்மானங்கள்:**

1. கிளையின் ஆண்டு விழாக் கொண்டாட்டம் வரும் மே 2019 மாதக் கூட்டத்துடன் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. சிறப்புப் பேச்சாளர்கள், கலைஞர்களைக் கொண்டு, பொழுது போக்கு நிகழ்ச்சியாக நடத்த முடிவு



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியை, குடும்ப உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடத்தமுடிவு செய்யப்பட்டது.

2. ஆண்டு பொதுக்குழுக் கூட்டம், வரும் ஜுன் 2019 மாதக் கூட்டத்துடன் நடத்த முடிவு செய்யப்பட்டது.

3. பொள்ளாச்சியில், மாணவிகள் உள்ளிட்ட பலபெண்களை, பாலியல் வன்கொடுமையால் சீரழித்த சம்பவத்தில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி, கடுமையான தண்டனையை வாங்கிக் கொடுக்க, காவல்துறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தீவிரம் காட்ட வேண்டும்.

4. 1980-1985- ஆண்டுகளில் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணி புரிந்த ஆசிரியர்களுக்கு, ரூ.14,940/- சம்பள விகிதத்தை மாற்றியமைக்க அரசு கல்லூரிக் கல்வி இயக்குநரை இம்மன்றம் கேட்டுக் கொள்கிறது.

5. 2006-ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற மதுரை மண்டல கல்லூரி ஆசிரியர்களுக்கு, புதிய ஓய்வூதிய திருத்தத்தை விரைந்து அமல்படுத்த கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மாவட்ட கருவூல அதிகாரி மற்றும் மாவட்ட சம்பளக் கணக்கு அதிகாரியையும் இம்மன்றம் பாராட்டுகிறது.

**பாராட்டு விழா**

வழக்கமான கூட்ட நடைமுறைக்குப்பின், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் R. பாஸ்கரன், சம்பளக் கணக்கு அலுவலர் முனைவர் K.S முத்துப்பாண்டியன் மற்றும் மாவட்ட கருவூல அதிகாரி திரு.V. சீத்தாராமன் அவர்களுக்கு பாராட்டு விழா, சிறப்புடன் நடைபெற்றது. பேரா.C.K. மதுரம் தலைமை வகிக்க, பேரா. G. ராமமூர்த்தி வரவேற்புரை வழங்கினார். பேரா. K.V. ஆனந்தன், சிறப்பு விருந்தினர்களை, அறிமுகம் செய்து பேசினார். உறுப்பினர்கள் பேரா. R. கிருஷ்ணமூர்த்தி, C.K. மதுரம், S. மகாதேவன், அருண் ராமச்சந்திர மோகன், R. பாக்யலெக்ஷ்மி, S. சேது ராக்காயி, MBS பிரேம்பாபு, G. ஜெகநாதன், TN. கோகுல் நாத்பாபு சிறப்பு விருந்தினர்களுக்கு, சால்வை, நினைவுப்பரிசு மற்றும் விருது வழங்கி கௌரவித்தனர். பேராசிரியர்கள் TN. கோகுல்நாத் பாபு, B. பார்த்த சாரதி மற்றும் N. பெரிய தம்பி, சிறப்பு விருந்தினர்களைப் பாராட்டிப் பேசினர். விருந்தினர்கள் ஏற்புரை வழங்கினர். இறுதியில், முனைவர் A. மனோகரன் நன்றி கூறினார்.

நிதி பரிவர்த்தனைகளை, வங்கி மூலம் மேற்கொள்ள விவரம்: வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மதுரை மெயின் : கணக்கு எண் : SB A/C 004901000034557; IFSC: IOBA0000049; பெயர்: TAMILNADU RETIRED COLLEGE TEACHERS ASSOCIATION, MADURAI UNIT. சில உறுப்பினர்கள், வங்கியில் பணம் செலுத்திவிட்டு, பெருளாளருக்கு அலைபேசி மூலமாகவோ, குறுந்தகவல் மூலமாகவோ தெரிவிக்காததால், அவர்கள் வங்கி மூலம் செலுத்திய தொகை, அவர்களது கணக்கில் வரவு வைக்கப்படாமல் உள்ளது. எனவே, வங்கிப் பண பரிமாற்றம் செய்பவர்கள், உடனடியாக, பொருளாளருக்கு, அலைபேசி எண்: 9443181155 - க்கு குறுந்தகவல் தெரிவிக்க கேட்டுக் கொள்கிறோம்.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**ஏப்ரல் 2019 முதல் புதிய உறுப்பினர் கட்டண விவரம்:-**

TANRECTA ஆண்டு சந்தா-ரூ. 500; TANRECTA SPEAKS -ரூ. 200; AIFRUCTO ஆயுள் சந்தா-ரூ.1000; TANRECTA வளர்ச்சி நிதி-ரூ.500 பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நன்கொடை-ரூ. 500. ஆக மொத்தம் ரூ. 2700

Medical Insurance Book -விலை ரூ. 60/- (சில பிரதிகள் மட்டும் உள்ளது. தேவைப்படுவர்கள் ரூ. 60/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**அடுத்த மாதக் கூட்டம் : 09-04-2019 (செவ்வாய்கிழமை) காலை 10.30 மணி. இடம் : பேரா. சண்முகசுந்தரம் அரங்கு மூட்டா அலுவலகம்.**

பேரா. **G. ராம மூர்த்தி**
செயலர், மதுரை கிளை

## கன்னியாகுமரிக்கிளை

கன்னியாக்குமரிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 12.03.2019 அன்று மாலை கிளைத்தலைவர் பேரா. Dr. R. இலட்சுமண சர்மா அவர்கள் தலைமையில் நாகர்கோவில் Y.M.C.A கூட்ட அரங்கில் வைத்து நடந்தது. வந்திருந்தோரைக் கிளையின் துணைச் செயலாளர் பேரா. Dr. M. பத்மநாபன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தின் தொடக்கத்தில் பயோனியர் குமாரசுவாமி கல்லூரியின் உடற்கல்வித் துறைப் பேராசிரியர். ரவீந்திரன் அவர்களின் மறைவிற்கும்; பேராசிரியர்: மேஜர்: Dr. S.S. ஹெக்டர் அவர்களின் மகன் மறைவிற்கும் அஞ்சலி செலுத்தப்பட்டு, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து கிளைச் செயலாளர் முன்கூட்ட அறிக்கை படித்தளித்தார். கிளைத்தலைவர் பேசும் போது இக்கிளையைச் சேர்ந்த பேராசிரியர் எவருக்கும் புதிய ஓய்வூதியம் திருத்தப்பட்டு ஆணை அனுப்பாத திருநெல்வேலி R.J.D அவர்களைச் சந்திப்பதென பேசினார். அதன்படி தலைவர், செயலாளர், பொருளாளர் என மூவரும் R.J.D. யை அடுத்த நாள் சென்று சந்திப்பதெனத்தீர்மானிக்கப்பட்டது. (சந்தித்தபோது என்ன நடந்தது என்ன பேசுகிறோம் என்பதை அடுத்தவாரம் கிளைக் கூட்டத்தில் விளக்குவோம்).

08-03-2019 அன்று மகாராஷ்டிர மாநிலத்து கோல்காபூரில் நடந்த AIFRUCTOமாநாட்டிற்கு கிளையின் தலைவர், செயலாளர், பேரா. K. ஸ்ரீதரன் என மூவரும் சென்றிருந்த செய்தியும், அங்கே என்னென்ன பேசப்பட்டன, என்பதையும் விளக்கமாகத் தவறாமல் பேசப்பட்டது. இந்த மாநாட்டில் ஆயுள் உறுப்பினர் சேர்க்கையில் தமிழ்நாடு முன்னிலை பெறுவதும், மேலும் சிறப்பாக கன்னியாகுமரி மாவட்டம் அதிகம் முன்னிலை பெறுவதும் சிறப்பித்து மாநாட்டில் பேசப்பட்டது நமக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

நிறைவாகக் கூட்டத்தில் பொருளாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. **அடுத்த கூட்டம் 09-04-2019 அன்று வழக்கமான இடத்தில் நடைபெறும்.**

**Dr. S. குமாரசுவாமி**
கிளைச் செயலர், கன்னியாகுமரிக்கிளை





## விழுப்புரம் கிளை

விழுப்புரம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 10.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு விழுப்புரம், வி.ஆர்.பி, மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கிளைப் பொருளாளர் பேரா. மு. வரதராசலு அவர்களது தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் முதல் நிகழ்வாக, இக்கிளையின் மாநிலப்பொதுக்குழு உறுப்பினர் பேரா. தெ. புருடோத்தமன் அவர்களது தாயார் இயற்கை எய்தியமைக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனம் கடைபிடித்தனர். வருகைபுரிந்த உறுப்பினர்களை பேரா. வெ. மனோகரன் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். திங்கள் ஒரு குறள் என்ற வகையில் பேரா. முனைவர் ந. கன்னையா அவர்கள் அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்:

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள் 423)

கிளைப் பொருளாளர் தமது தலைமையுரையில், உறுப்பினர்களின் ஓய்வூதியத் திருத்தம், தொடர்பான சில செய்திகளைக் குறிப்பிட்டார். ஓய்வூதியதாரர்களுக்கு மாதந்தோறும் மருத்துவப்படியாக ரூ. 300/- வழங்கப்பட்டு, அதே சமயம் மாதந்தோறும் மருத்துவக் காப்பீட்டுத் தொகையாக ரூ. 350/- பிடித்தம் செய்யப்படுகிறது. எனவே, ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப் படியை உயர்த்தி வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார். நமது மாநிலத்தில் ஓய்வூதியதாரர் 80 வயது நிறைவு அடைந்தது முதல்தான் உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால் நமது நாட்டிலேயே வேறு சில மாநிலங்களில் ஓய்வூதியதாரர் 70வயது நிறைவு அடையும் நிலையிலிருந்தே உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. எனவே, இக்கோரிக்கையையும் நாம் வலியுறுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கிளைச் செயலர் பேரா. இரா. நிசார் அவர்கள் தமது அறிக்கையில் கடந்த ஒரு மாத காலத்தில் நிகழ்ந்த சங்க செயல்பாடுகளை விவரித்தார். 25. 02. 2019 அன்று திருச்சியில் நடைபெற்ற நமது மாநிலச் செயற்குழுக் கூட்டத்தின் சில முடிவுகளை உறுப்பினர்களிடம் தெரிவித்தார். குறிப்பாக, ஆண்டு உறுப்பினர் கட்டணம் செலுத்தாத உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் செய்தி மடல் அனுப்பப்படமாட்டாது என்ற செய்தியை உறுப்பினர்களுக்குச் சுட்டிக் காட்டினார். 2019-20 -ஆம் நிதி ஆண்டில் மாதந்தோறும் தமது ஓய்வூதியத்திலிருந்து எவ்வளவு வருமானவரிப் பிடித்தம் செய்யப்படவேண்டும் என்பதை உறுப்பினர்கள் ஒரு கடிதத்தின் மூலம் கருவூலத்தில் இம்மாதம் 15-ந்தேதிக்குள் தெரிவிக்கவேண்டும் என்பதையும் உறுப்பினர்களிடம் கூறினார்.

இம்மாதம் பிறந்தநாள் காணும் பேரா. எஸ். சண்முக பிச்சைக்கனி மற்றும் பேரா. இரா. இராமநாதன் ஆகியோர்க்கும், இம்மாதம் மணநாள் காணும் பேரா. இரா. நடராசன் (ஆங்கிலம்) அவர்களுக்கும் வருகை புரிந்த உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். கிளையின் மாநிலப்பொதுக்குழு உறுப்பினர் பேரா. தெ. புருடோத்தமன் அவர்களது நன்றியுரைக்குப்பின் கூட்டம்

நிறைவடைந்தது. கூட்டத்திற்குப்பின், விழுப்புரம், மஹாலஷ்மி பிளாஸாவில் உள்ள உணவகத்தில் உறுப்பினர்களுக்கு மதிய உணவு சிறப்பு விருந்தாக அளிக்கப்பட்டது.

**அடுத்த மாதக்கூட்டம் 13. 04. 2019 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வி. ஆர். பி. மேல்நிலைப்பள்ளி** வளாகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

**பேரா. இர. நிசார்**

செயலர், விழுப்புரம் கிளை.

**சென்னை கிளை**

சென்னை கிளையின் கூட்டம் தலைவர் முனைவர் வை. சுவாமிநாதன் தலைமையில் 09.03.2019, சனிக்கிழமை மாலை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. 110 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். காஷ்மீரில் புல்வாமாவில் தீவிரவாதிகள் தாக்குதலில் பலியான தமிழகத்தின் சுப்பிரமணியன், சிவச்சந்திரன் உள்ளிட்ட 40 வீரர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பேரா. முத்துசாமி வழங்கிய குறளுரைக்குப்பின் தலைவர் தலைமையுரை ஆற்றினார். கடந்த மாத முக்கிய நிகழ்வுகளாக 1) Tanrecta திருச்சி செயற்குழு, 2) ஜேக்டோஜியோ போராட்டத்தையொட்டி இடைநீக்கம் (27 பேர்) / இடமாற்றம் (15 பேர்) ஆகிய பழிவாங்குதல் நடவடிக்கைக்கெதிரான TNGCTA போராட்டம், 3) AIFRUCTO கோலாப்பூர் மாநாடு மற்றும் 4) ஓய்வூதியத்திருத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

கோலாப்பூர் மாநாடு முடிந்து கிளைச்செயலாளர் முனைவர் லாரன்ஸ் உரிய நேரத்தில் திரும்ப முடியாததால், கிளைத் தலைவரே இயக்க அறிக்கையினை அளித்தார். அதில், ஓய்வூதிய திருத்தம் தொடர்பாக பாரதி மகளிர், வியாசர்பாடி அம்பேத்கர் உள்ளிட்ட சில அரசு கல்லூரிகளிலும், உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்கள் பொருத்து மண்டல இயக்குநர் அலுவலகத்திலும், முதல்வர்கள், இணை இயக்குநர்களுக்கு இயக்குநகரத்திலும் நிலவிய தேக்கநிலை முடிவடைந்தது பெரும்பாலான உறுப்பினர்கள் திருத்திய ஓய்வுதிய மற்றும் நிலுவைத் தொகையினை பெற்றுள்ள போதும், இன்னமும் பலருக்கு PPO/ கருவூலங்கள் அளவில் நிலவும் தாமதம்பற்றி எடுத்துரைத்தார். இதுகுறித்தும், வயது அடிப்படையிலான கூடுதல் ஓய்வூதியம், உரிய காலம் நிறைவடைந்ததால் கம்யூடேஷன் தொகையினை மீளப்பெறுதல், வருமான வரிப்பிடித்தம் ஆகியவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளை விவரித்தார்.

வெற்றிகரமாக நடைபெற்ற மாநாடு, புதிய பெறுப்பாளர்கள் தேர்தல், ஏற்பாடுகளை சிறப்புற செய்த சிவாஜி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (AIFRUCTO) ஆகியவைப்பற்றிய செய்திகளும் தெரிவிக்கப்பட்டன.

ஏப்ரல் முதல் ஜுன் வரையான வாழ்வுச்சான்று சமர்ப்பிக்க மூன்று நடைமுறைகள் (நேரில் செய்தல், படிவங்கள் பூர்த்தி செய்து அரசிதழ் அலுவலர்/ மருத்தவர் / வங்கி மேலாளர் கையொப்பத்துடன் அஞ்சலில் அனுப்புதல், ஜீவன் பிரமாண்) உள்ளன என்பதை தலைவர் விளக்கிக்கூறினார். அடுத்த கூட்டத்தில் மாதிரி படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன் ஜீவன் பிரமாண் அடிப்படையில் வாழ்வுச் சான்று சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் இதற்கான நடவடிக்கைகளை பேரா. விவேக் ராஜா மற்றும் பேரா. சத்தியநாராயணா மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



நிதிநிலை மற்றும் பல்வேறு கட்டணங்களைச் செலுத்த வேண்டிய தேவைபற்றி கிளைப்பொருளாளர் முனைவர் உஷா ரகோத்தம் அறிக்கை அளித்தார். தொடர்ந்து இம்மாதத்தில் பிறந்த நாள் காணும் உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

மகளிர் மாநாட்டினை நமது கிளை சார்பில் நடத்துமாறு மாநிலக் கழகம் கேட்டுள்ளது என்பது உள்ளிட்ட பொருட்கள் குறித்து நடைபெற்ற விவாதத்தின் முடிவில் கீழ்கண்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டன: (1) மாநிலக் கழகத்தின் வேண்டுகோளையேற்று மகளிர் மாநாட்டினை ஜுன் மாதத்தில் நடத்துவது, உறுப்பினர்களிடமிருந்து சிறப்புநிதியாக ரூ.500 வீதம் பெறுவது (2) கோலாப்பூர் AIFRUCTO மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதியபொறுப்பாளர்கள், குறிப்பாக பேரா. பார்த்தசாரதி-பொதுச்செயளாலர், பேரா. கோகுல்நாத் பாபு-தேசிய செயலர், பேரா. சுவாமிநாதன்-மண்டலச்செயலர் உள்ளிட்ட அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கிறது. (3) நமது கழகத்தைச் சேர்ந்த AIFRUCTO பொறுப்பாளர்களை செயற்குழுவிற்கு நிரந்தர சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்க வேண்டும். (4) சென்னை ஓய்வுதிய இயக்குநர் அலுவலக வளாகத்தில் திரு. D.S. நகரா சிலையை நிறுவ அரசிடம் அனுமதி கோருவது. (5) தேநீர் வழங்கிட நன்கொடையளித்த பேரா. T. சிவகாமி (ரூ.5000) மற்றும் பேரா. K. செல்வராஜ் (ரூ. 2500) ஆகியோருக்கு கிளை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**ஏப்ரல் மாதக் கூட்டம் வழக்கம்போல் இரண்டாம் சனிக்கிழமை 13.04.2019 மாலை 4 மணிக்கு காயிதேமில்லத் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெறும்.**

முனைவர் **வை. சுவாமிநாதன்**

தலைவர், சென்னை கிளை

**செய்யாறு கிளை**

எமது கிளையின் இம்மாத பொதுக்குழுக்கூட்டம் 13.02.19 அன்று பேரா. Dr. P. மோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அனைவரையும் வரவேற்றார். மாதம் ஒருகுறன் அடிப்படையில் "நீத்தார் பெருமை" எனும் அதிகாரத்தின் கிழ்வரும் குறளை:

"சுவை ஒளி, ஊறு, ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகை தெரிவான்கட்டே உலகு"

அதன் பொருளினை நயன்பட விளக்கினார்.

**இரங்கல் தீர்மானம்:**

பேரா. குமாரசாமி அவர்கள் தமிழ் பேராசிரியர் மறைவுக்கு உறுப்பினர்கள் மௌன அஞ்சலி செலுத்த அவரின் பணியை பாராட்டி பேசினார்.

**பிறந்தநாள் மணநாள் வாழ்த்துக்கள்:**

பிறந்தநாள் கண்டவர்கள் இக்கிளை உறப்பினர்களான (1) போரா.Dr. P. மோகன் குமார் அவர்கள் (2) பேரா. M.K ஆஃகா இமான் கான் அவர்கள் மணநாள் கண்டவர்! பேரா. Dr. S. முத்தழகு அவர்கள் இவர்கள் மூவருக்கும் உறுப்பினர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்து பாராட்டிப் பேசினர்.

செயற்குழுவிற்கு செயலர் செல்ல இயலாதநிலையில் பேரா. Dr. E. மெய்யப்பன் அவர்களை செயலர்சார்பில் சென்று செயற்குழுவில் கலந்து கொள்ள வேண்டும் என்று இப்பொதுக்குழு பணித்தது.

பேரா. மோகன்குமார் அவர்கள் உறுப்பினர்களுக்கு தேனீர் வழங்கினார்.

பொருளாளர் பேரா. L. குப்புசாமி அவர்கள் நிதிநிலையை அறிக்கையை சமர்ப்பித்தார்.

இணைச்செயளாலர் பேரா. சீனிவாச செட்டி அவர்கள் நன்றி கூறியதுடன் கூட்டம் நிறைவடைந்தது.

**பேரா. வேணு. சிவப்பிரகாசம்**
செயலர், செய்யாறு கிளை

**பொள்ளாச்சிக் கிளை**

எமது கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 09-03-2019 அன்று காலை11 மணியளவில் ந.க.ம. கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கிளைத்தலைவர் முனைவர் சுந்தரம் அவர்கள் தலைமையில், வருகைபுரிந்த அனைத்து உறுப்பினர்களையும் கிளைச்செயலாளர் முனைவர் மு. இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்று கூட்ட நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்தார்.

கிளைத் தலைவர் சுந்தரம் அவர்கள், பொருளாதார துறைத் தலைவர் (முன்னாள்) **பேராசிரியர் இராதாகிருஷ்ணன்** அவர்களின் மறைவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திவிட்டு கிளையின் செயல்பாடுகளை விளக்கிக் கூறினார்கள். இம்மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் 1. நாராயணன் 2. ஆறுமுகம் 3. பேராசிரியர் பிரேமா 4. பேராசிரியர் முனைவர் கலாமணி 5. முனைவர் வடிவேல்... ஆகியோர்களை பல்லாண்டு வாழ இக்கிளை வாழ்த்துகிறது.

எமது கிளையில் 2006 க்கு முன் ஒய்வுபெற்ற, பேராசிரியர்கள் அனைவருக்கும், ஓய்வூதிய திருத்த பலன்களை பெற்றுத் தந்துள்ளது. அவர்களின் சார்பாக உறுப்பினர்கள் அனைவருக்கும் மதிய உணவு விருந்தளிக்கப்பட்டது. அவர்களுக்கு கிளையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொருளாளர் பேராசிரியர் பாலகங்காதரன் அவர்கள், கிளையின் நிதி நிலைமையை விளக்கி வரும் ஏப்ரல் மாதம் உறுப்பினர் கட்டணங்களை, தவறாது செலுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இறுதியில் துணைத்தலைவர் பேராசிரியர் பிரேமா அவர்கள் நன்றியுரைகூற கூட்டம் இனிதே முடிவுற்றது. **அடுத்த கூட்டம் ஏப்ரல் மாதம் 13.02.2019 சனிக்கிழமை காலை 10 மணியளவில் ந.க.ம. கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



உறுப்பினர் கட்டணம் செலுத்துவோர் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்தி விபரத்தை செயலாளர்/ பொருளாளருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. நேரிலும் செலுத்தலாம்.

இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, IOB, NGM College Branch Pollachi. SB/AC/ 17010100008755/ FISC - IOBA 00001701

முனைவர் **மு. இராமச்சந்திரன்**
செயலாளர்.

**இராமநாதபுரம் கிளை**

இராமநாதபுரம் கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 12.03.2019 செவ்வாய் கிழமை மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் கிளைத் தலைவர் பேரா. முனைவர் S.A. சிந்தா நைனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வருகை புரிந்த உறுப்பினர்களை மனதார வரவேற்ற கூட்டத் தலைவர் கூட்டத்திற்கான கருது பொருள் பற்றியும் விளக்கி பேசினார்கள்.

25.02.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்ட தீர்மானங்கள் பற்றியும் 2018-19 ஆண்டுச் சந்தா வழங்காதவர்களுக்கு TANRECTA SPEAKS அனுப்பப்பட மாட்டாது என்ற முடிவினையும் கிளைச் செயலாளர் எடுத்துக் கூறினார்கள். கிளையின் அனைத்து உறுப்பினர்களிடம் இருந்தும் 2018-19 ஆண்டுச் சந்தா பெறுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றியும் கிளைச்செயலாளர் விளக்கினார்கள்.

கிளை உறுப்பினர் பேரா. முனைவர் R. காசிநாததுரை அவர்கள் திருக்குறளின் அதிகாரம் 58-ல் 576 வது குறளான

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்து கண்ணோடா தவர்.

பற்றிய விளக்கத்தினை சுவைபட விளக்கினார்கள்.

வருகை புரிந்த உறுப்பினர்களுக்கு கிளை உறுப்பினர் பேரா. முனைவர் S. பாலசுப்பிரமணியன் அவர்கள் இரவு உணவினை வழங்கினார்கள்.

**அடுத்த மாதாந்திர பொதுக்குழு கூட்டத்தினை வருகின்ற 13.04.2019 சனிக்கிழமை வழக்கமான இடத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.**

கிளைத் துணைத்தலைவர் பேரா. எஸ். சேசுராஜ் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

**க. ஜீவானந்தம்**
கிளைச் செயலாளர்.

**திருநெல்வேலி கிளை**

கிளையின் மாதாந்திரக் கூட்டம் 14.03.2019 அன்று மாலை 6 மணிக்கு பேராசிரியர் M. கதிர்வேல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. வருகை புரிந்த உறுப்பினர்களை பேரா. P. ஜெகநாதன் வரவேற்றார்.

இக் கூட்டத்திற்கு நமது கிளையின் மூத்த பேராசிரியர் P. தட்சிணாமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இக்கிளையின் 72 உறுப்பினர்களுக்கும், 2018-19 ஆம் ஆண்டிற்கு உறுப்பினர் கட்டணம் அனுப்பப்பட்டுவிட்டது என்ற அறிக்கை பொதுச் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் இதற்கு முந்தைய ஆண்டுகளுக்கும் எவ்வித நிலுவையும் இல்லை.

ஏப்ரல், மே, ஜுன் ஆகிய மூன்று மாதங்களில் உறுப்பினர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட கருவூலங்களுக்குச் சென்று நேர்காணலில் ( Mustering) கலந்து கொள்ளுமாறு நினைவூட்டப் படுகிறார்கள். நேர்காணலை தாமதப்படுத்த வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். மேலும் நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தங்களின் ஜனநாயகக் கடைமையை நிலை நாட்டும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இம்மாதம் (ஏப்ரல் 2019) பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் Dr. A. ரெங்கசாமி, S. மாதுஞானையா, J. ஜுனைதீன், M. தாமஸ் புனிதன், S. உலகம்மாள், K. வெங்கடாச்சலம், Dr. I. ஜெயசுந்தர் சிங், N. சண்முகபார்வதி ஆகியோர் எல்லா நலங்களுடனும், வளங்களுடனும், மன அமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்சங்கம் அவர்களை வாழ்த்துகின்றது.

உறுப்பினர்கள் கருவூலங்களிலிருந்து From 16-ஐப் பெற்று, ஆடிட்டர் முலம் From 26 As- ஐப் பதிவிறக்கம் செய்து, அதை சரிபார்த்து, 31-07-2019 க்கு முன் வருமான வரிக்கணக்கினைத் தாக்கல் செய்யும் படி நினைவூட்டப் படுகிறார்கள்.

2006-ஆம் ஆண்டிற்கு முன் ஓய்வு பெற்ற பேராசிரியர்களுக்கான ஓய்வூதியத்திருத்தம் மிகவும் மந்தமான நிலையிலேயே திருநெல்வேலி RJDCE அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. பேரா. P. கதிர்வேல் ஆறுமுகம் அவர்கள் தொடர்ந்து RJDCE அலுவலகம் சென்று நடைமுறைகளைக் கவனித்து வருகிறார்கள். இருப்பினும் பலன்தான் இல்லை.

**ஏப்ரல் 2019 மாதக் கூட்டம் 11-04-2019 (இரண்டாம் வியாழன்) அன்று மாலை 6 மணிக்கு வழக்கம் போல் டவுன் I.O.B யூனியன் கட்டடத்தில் நடைபெறும்.** உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அன்று வருமான வரி சம்பந்தப்பட்ட படிவங்கள் வழங்கப்படும்.

பேராசிரியர் சங்கர நாராயணன் வழங்கிய சிறப்பு இன்சுவை விருந்திற்குப்பின் பேரா. M. சுடலையாண்டி நன்றி கூற கூட்டம் இனிது நிறைவுபெற்றது.

**தி. பார்வதி நாதன்**
செயலர் திருநெல்வேலி கிளை

## கரூர் கிளை

10.03.219 அன்று காலை பத்துமணியளவில் கரூர் கிளையின் கூட்டம், கரூர் வாணிபச் செட்டியார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளையின்



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



துணைத்தலைவர் பேரா. J. சீனிவாசன் தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு கிளை உறுப்பினர்கள் கணிசமான அளவில் கலந்து கொண்டனர். கூட்டத்தில், மார்ச் 7 மற்றும் 8 தேதிகளில் மகாராஷ்டிராவிலுள்ள கோலாப்பூரில் நடைபெறவிருக்கும் AIFRUCTO வின் தேசிய அளவிலான மாநாடு பற்றி கடந்த 25.02.19 அன்று நடைபெற்ற மாநில செயற்குழுவில் மாநிலத்தலைவர், மாநிலச் செயலர் மற்றும் கிளைச் செயலர்களால் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. அவற்றில்:-

1. கிளை வாரியாக கணிசமான அளவில் மாநாட்டிற்கு கலந்து கொள்ள வேண்டுமெனவும், கிளைவாரியான உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மாநிலச் செயலரால் கணக்கெடுக்கப்பட்டது.
2. AIFRUCTO வின் விதிகளில் ஒரு சில மாற்றங்களைச் செய்யவேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.
3. நம் TANRECTA -விலிருந்து ஐந்து பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களனைவரும் AIFRUCTO-வின் தேர்தலுக்கு வாக்கு அளிக்க உரிமை பெற்றவர்களாவார்கள். அவர்கள் கன்னியாகுமாரி, விருதுநகர், கோவை, சென்னை மற்றும் பழனி கிளைகளைச் சார்ந்தவர்களாவர்.

   மேற்கூறிய விசயங்களனைத்தும் கிளை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.
4. 2006- க்குப் பின் ஓய்வு பெற்றவர்கள் பெறவேண்டிய நிலவைத்தொகைக்கான ஆணையை விரைவில் பெறுவதற்கு உரிய துரித நடவடிக்கையை தலைமைக்கழகம் எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.
5. TANRECTA- வின் சந்தாத்தொகையை நீண்ட நாட்கள் நிலுவை வைத்திருப்போருக்கு வரும் ஏப்ரல் முதல் மாத இதழ் நிறுத்தப்படும் என்று செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.
6. மேலும் கிளைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையை உடனடியாக கிளைப் பொருளரிடம் செலுத்த வேண்டுமென உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.
7. இறுதியில் கிளை ஆலோசகரும் ஒருங்கிணைப்பாளருமான பேரா. M. பழனிச்சாமி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**அடுத்தக் கூட்டம் 14.04.2019 அன்று இதே அரங்கத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.**

முனைவர் **V. பழனிச்சாமி**
செயலர். கரூர் கிளை

## ஈரோடு கிளை

ஈரோடு கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் கடந்த 09-03-2019 அன்று காலை 10-30 மணிக்கு ஈரோடு ஒற்றுமை அரங்கில் கிளைத் தலைவர்

முனைவர் K.R. பரமசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த பேராசிரியர்களை பேரா. M. கோபால சாமி வரவேற்றார். இம்மாதம் பிறந்த நாள் காணுகின்ற 11 பேராசிரியர்களின் பெயர்கள் வாசிக்கப்பெற்று வாழ்த்தும் கூறப்பட்டது.

இதையடுத்து கடந்த 25.02.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற செயற்குழு சார்ந்த விவரங்கள் அனைத்தும் விவரிக்கப்பட்டது. மகராஷ்டிர மாநிலம் கோல்காப்பூரில் நடைபெற உள்ள AIFRUCTO மாநாடு மற்றும் அதில் கலந்து கொள்ள உள்ள 10 பேராசிரியர்கள் மற்றும் தீர்மானங்கள் அமைப்பு விதி மாற்றங்கள் ஆகியவை பற்றி விளக்கப்பட்டன.

இந்த செயற்குழுவில் TANRECTA -ன் 18வது மாநில மாநாடு சம்பந்தப்பட்ட வரவு–செலவு கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இத்தகைய செயலை ஈரோடுகிளை பெருமையுடன் நோக்குகின்றது. ஒரு மாநில மாநாட்டினை சிறப்புற நடத்திமுடிக்க உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநாட்டிற்கான அனைத்து செலவுகளையும் மேற்கொண்டும் நமது 18 வது மாநில மாநாடு சிறப்புறநடைபெற அயராது உழைத்தும் நிதியினை கொடுத்தும் உதவிய அனைத்து பேராசிரியர்களுக்கும் நன்றி. எந்த ஒரு மாநாடும் சிறப்புடன் நடைபெற நல்ல வழிகாட்டுதல் அவசியமானது ஆகும். அதனை நல்கிய அனைத்து மையப் பொறுப்பாளர்களையும் நன்றியுடன் பார்க்கிறேன்.

2006 க்குமுன் ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் மற்றும் 2006 க்குப் பின் ஓய்வு பெற்றவர்களது நிலை பற்றியும் தமிழக அரசு வெளியிட்டுள்ள Concordant Table பற்றியும் பேசப்பட்டது. அரசினுடைய அறிவிப்பு எவ்விதப் பலனையும் தரவில்லை. 14940 பற்றியும் அரசின் போக்கு மனவருத்தத்தை தருகின்றது. திருச்சி செயற்குழுவில் அனைத்து விவரங்களும் எடுத்துக் கூறப்பட்டன.

அடுத்து கிளைக் கூட்டத்தில் பேசிய பொருளாளர் பேரா. பிரபாகரன் அவர்கள் நமது 18 வது மாநில மாநாடு சம்பந்தமாக துவக்கம் முதல் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளை விவரித்தார். நிதி திரட்டிய விதம் பேரா K.P. தனசேகரன் தனது உரையினை பௌர்ணமி திதி எனத் தொடங்கி பெண் என்றால் பேணுதல் எனவும் இல்லாளுக்கு எதிர்ச் சொல் இல்லை எனவும் துறவறம் என்பது பெண்களுக்கு இல்லை என்றும் ஆதிசங்கரர் மற்றும் பட்டினத்தார் போன்றவர்களையும் குறிப்பிட்டார். அவருக்கு நன்றி. **ஈரோடு கிளையின் வருகின்ற கூட்டம் 13.04.2019 அன்று வழக்கம் போல் நடைபெறும்.** நன்றி.

**M. கோபால சாமி**
ஈரோடு கிளை, செயலர்.

### திருச்சிக் கிளை

திருச்சி கிளையின் மதாந்திரக் கூட்டம் 10/03/2019 ஆம் நாள் சனிக்கிழமை மாலை 5.00 மணி அளவில், தில்லை நகர் கி.ஆ.பெ.விசுவநாதம் மேநிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



கிளைத்தலைவர் பேரா. ச. ஜூலியன் தலைமையேற்றார். திருச்சிக் கிளையின் துணைத்தலைவர் பேரா. கு. கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இம்மாதக் கூட்டம் தொடங்கும் வரை கழகத்தின் செயல்பாடுகள் குறித்து கிளைத்தலைவர் உரை நிகழ்த்தினார்.

25/02/2019 அன்று TANRECTA-வின் மாநில செயற்குழு கூடியது. அதில் நமது கிளைப்பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் திருச்சி மண்டலத்தில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றி 2006 க்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் திருத்தி வழங்கப்படாமல் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைக் குறிப்பிட்டார்.

அடுத்ததாக, கிளைத்தலைவரும், துணைத்தலைவரும் திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இயக்குநரை சந்தித்தனர். நமது மாவட்ட அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு எத்துணைபேருக்கு ஓய்வூதிய மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரங்களைக் கேட்டறிந்தார். இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாத விண்ணப்பங்களை விரைந்து பரிசீலித்து, சம்மந்தப்பட்ட கருவூலங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

25.02.2019 நாள்வரை கல்லூரிவாரியாக எத்தனை விண்ணப்பங்கள் இறுதியாக்கப்பட்டுள்ளன என்பதை இயக்குநர் வழங்கியதோடு, அனைத்து நிலுவை விண்ணப்பங்களிலும் விரைந்து முடித்துத்தரப்படும் என்றார். இணை இயக்குநர் வழங்கிய பட்டியலை தலைவர் படித்துக்காட்டினார்.

அடுத்து துணைத்தலைவர் பேசுகையில், தலைவர் துணைத்தலைவர், இணைச்செயலாளர் ஆகியோர் அடங்கியகுழு திருச்சி தலைமை கருவூலம் சென்று சம்மந்தப்பட்ட பிரிவு ஊழியர்களிடம் இம்மாத இறுதிக்குள் அனைத்து நிலுவைகளையும் வழங்கிட வேண்டுமென வற்வுறுத்திக் கேட்டுக்கொண்டது. ஊழியர்களும் தங்களால் இயன்ற வரை முடித்துத்தருவதாகக் கூறினர் என்ற தகவல்களைக் கூறினார்.

அடுத்த நிகழ்வாக மார்ச் மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்களின் பெயர்ப்பட்டியலை கிளையின் பொருளாளர் ஹுஸைனி படிக்க, உறுப்பினர்கள் கையொலி எழுப்பி தங்களது வாழ்த்துக்களை வெளிப்படுத்தினர். மார்ச் மாதக் கூட்டத்திற்கு மாலை சிற்றுண்டி வழங்கியோருக்கு நன்றி கூறப்பட்டது.

உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. கூட்டம் நடத்தும் அறை எதிர்ஒலி தருவதாலும், பேசப்படும் செய்திகள் சரியாக செவிமடுக்க முடியாததாலும், 'கை மைக்' ஒன்று கிளைக்கு விலைக்கு வாங்கலாம் என்ற யோசனைகள் தரப்பட்டன. அக்கருத்தை பொறுப்பாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அடுத்து, முசிறி கருவூலம், திருவெறும்பூர் கருவூலங்கள் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவது குறிப்பிடப்பட்டது. தேவைப்பட்டால் சம்மந்தப்பட்ட கருவூலங்கள் அலுவலர்களை ஆட்சிக்குழு விசாரித்து வற்புறுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது. நிதியாண்டு

மார்ச் 2019 மாதம் நிறைவடைவதால் இவ்வாண்டிற்கான சந்தாதொகையை அனைவரும் செலுத்துமாறு கிளைப் பொருளாளர் வேண்டுகோள் விடுத்தார்.

இறுதியாக கிளைச் செயலாளர் பேரா. ந. பாஸ்கரன் நன்றி கூற கூட்டம் முடியுற்றது. அடுத்த மாதக் கூட்டம் 13.04.2019 அன்று கி.ஆ.பெ.விசுவநாதம் மேல்நிலைப்பள்ளியில் மாலை 5 மணிக்கு நடைபெறும்.

முனைவர் ச. ஜூலியன்
கிளைத்தலைவர்

## வேலூர் கிளை

வேலூர் கிளையின் மார்ச் மாதக் கிளைக் கூட்டம், கிளையின் துணைத் தலைவர் பேரா. ஜி. ஜக்ரியா பாஷா தலைமையில் வேலூர் ஆசிரியர் இல்லத்தில் 12.03.2019, மாலை 5.00 மணிக்குச் சிறப்பாக நடந்தது. கிளைச் செயலர் அனைவரையும் வரவேற்றார்.

கிளையின் முன்னாள் உறுப்பினர், பேரா. பட்டாபிராமன் (தமிழ்த் துறை) இவ்வுலகைவிட்டு நீங்கி மூன்றாண்டுகள் கழிந்துவிட்டன. அன்னாரின் நினைவஞ்சலி இங்கு அவரது இளவல் திரு. பாரி அவர்கள் இக்கிளை உறுப்பினர்களோடு இணைந்து நடத்திட கேட்டுக்கொண்டார்கள். அதன் படி கூட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக அன்னாருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அடுத்த நிகழ்ச்சியாகப் பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (1) பேரா. P.A டேவிட் (04.03.1950) (2) பேரா. K. நேசமணி (19.03.1953) (3) பேரா.R. மணிமேகலை (21.03.1950) (4). பேரா. Dr. D மேபல் ரெஜினா (26.03.1953) ஆகிய நால்வரும் நோய் நொடியின்றி நீடித்து வாழ வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

25.02.2019-இல் திருச்சியில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட செயலர், கூட்ட நிகழ்ச்சிகளை விரிவாக எடுத்துக் கூறினார். ஆண்டு உறுப்பினர் கட்டணங்களை பாக்கி இல்லாமல் செலுத்தியவர்களுக்கு மட்டுமே Tanrecta Speaks அனுப்பப்படும் எனபதை விளக்கினார். எனவே 2016-17, 2017-18, 2018-19 ஆகிய ஆண்டுகளில் உறுப்பினர் கட்டணங்களில் பாக்கியில்லாமல் செலுத்திடவும் செயலர் கேட்டுக்கொண்டார். பாக்கிஇருந்தால் ஏப்ரல் முதல் வாரத்தில் உறுப்பினர் கட்டணம் செலுத்தாதவர் பட்டியலைச் செயலர், பொதுச் செயலருக்கு அனுப்பி வைப்பார். அப்பட்டியல் அனுப்பாத கிளைகளுக்கும்Tanrecta Speaks அனுப்புவதும் இல்லை என்று March, 2019-Tanrecta Speaks பக்கம் 12-ல் முடிவு செய்யப்பட்டுள்ளது காண்க.

கட்டிட நிதிக்காகக் கிளை உறுப்பினர் பேரா. கோட்டீஸ்வரன், கூட்டத்தன்று, ரூ.5000/- கொடுத்துள்ளார்கள். பிற உறுப்பினர்களும் கட்டிட நிதிக்கு அவரவர் வசதிக் கேற்ப விரைந்து பணம் தரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கிளைத் துணைத் தலைவர் நன்றிக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. பேரா. பட்டாபிராமன் வீட்டார் அளித்த சிற்றுண்டிக்குப்பின் கூட்டம்



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



முடிந்தது. பேரா பட்டாபிராமன் வீட்டார் அனைவருக்கும் நன்றி. பேரா. ஆனந்தன் இக் கூட்டத்தில் ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த அதியமானைப் போல் உறுப்பினர் அனைவருக்கும் தேனுண்ட நெல்லிக்கனிகளை அளித்த சிறப்பும் உண்டு.அன்னார்க்கும் நன்றி.

**அடுத்த மாதக் கிளைக் கூட்டம் 09.04.2019 அன்று மாலை 5.00 மணிக்கு வழக்கம் போல் நடைபெறும்.**

பேரா. முனைவர் **மு. குருசாமி**
செயலர், வேலூர் கிளை.

## பழனிக் கிளை

பழனிக் கிளையின் மார்ச் மாதக் கூட்டம் 12.03.2019 செவ்வய்க்கிழமை பகல் 11.30 மணிக்கு 'நளபாகம்' விழா அரங்கில் நடைபெற்றது. பெரும்பாலான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கிளைத் தலைவர் பேராசிரியர் S.P மாணிக்கம் தலைமையேற்றார். பேராசிரியை கோமதி K. சிவன் இறைவணக்கம் பாடிடக் கூட்டம் தொடங்கியது. மார்ச் மாதம் பிறந்தநாள் காணும் நம் கிளைப் பேராசிரியர்களுக்குத் துணைத் தலைவர் பேராசிரியர் S. இரத்தினசபாபதி பிறந்தநாள் வாழ்த்துரைத்தார்.

ஓய்வூதியத்திருத்தம் பெறுவதற்கு பழனிக்கிளை எடுத்துள்ளத் தொடர் நடவடிக்கைகளையும், இவ்வாண்டு வருமானவரி செலுத்துவதற்கான வழிமுறைகளையும், கிளைத் தேர்தல்களில் போட்டியின்றித் தேர்ந்தெடுப்பதற்கான திட்டங்களையும் விளக்கமாகத் தன் பேச்சில் குறிப்பிட்டார்.

08.03.2019-ல் கோல்காபூரில் நடைபெற்ற ஐப்ரக்டோ மாநாட்டின் நிகழ்வுகளை மாநிலத் துணைத்தலைவர் பேராசிரியர் N. மாரிசாமி விளக்கமாகப் பேசினார்.

**தீர்மானங்கள்:**

1. ஐப்ரக்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் பேராசிரியர் பா.பார்த்தசாரதி மீண்டும் பொதுச்செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு வாழ்த்துரைத்துப் பாராட்டி மகிழ்கிறது பழனிக் கிளை.
2. ஐப்ரக்டோ அமைப்பின் தமிழ்நாட்டு மாநிலத்திற்கு தேசியச் செயலாளராகப் பேராசிரியர் கோகுல்நாத்பாபு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கும் வாழ்த்தும், பாராட்டும் தெரிவிக்கின்றோம். ஏக மனதாக அனைத்துப் பொறுப்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்வுக்குழுவைப் பாராட்டும் தீர்மானம் நிறைவேறியது.
3. கோல்காபூர் ஐப்ரக்டோ மாநாட்டில் கலந்து கொண்ட செயலர் பேராசிரியர் துரை. சுந்தரமூர்த்தியையும் பழனிக்கிளை பாராட்டுகிறது. மாநிலத் துணைத்தலைவர் பேராசிரியர் N. மாரிசாமியையும் பாராட்டுகிறது.

4. 2018 ஆம் ஆண்டின் சந்தாத் தொகைகளை பழனிக்கிளை உறுப்பினர்கள் செலுத்திவிட்டனர். 2019 ஆம் ஆண்டிற்கான சந்தாத் தொகைகளையும் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேறியது.

5. ஐப்ரக்டோ ஆயுள் சந்தாதாரர்களுக்கும், இதரருக்கும் ஐப்ரக்டோவின் மார்ச்-2019 ஐப்ரக்டோ இதழ்களை அனுப்பிடுமாறு மைய அமைப்பைக் கேட்டுக் கொள்கிறோம். முகவரிகள் அனுப்பப்பட்டுள்ளன.

6. பழனிக் கிளை உறுப்பினர்கள் தங்கள் சந்தாத் தொகைகளை நம் சங்கத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். காசோலைகளாகவும் தரலாம். என்ன காரணத்திற்காகக் காசோலை தரப்படுகிறது என்னும் விபரத்தைக் காசோலையின் பின்புறம் பென்சிலால் குறிப்பிடலாம்.

**வங்கிக் கணக்கு விபரம்**

பெயர் : TAMIL NADU RETIRED COLLEGE TEACHERS ASSOCIATION.

வங்கி : INDIAN BANK, PALANI,

கணக்கெண் : A/C No. 600 215 0326, IFSC Code: IDIB 000 P 014

ஏப்ரல் மாதக் கூட்ட **09.04.2019 பகல் 11.30 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் நடைபெறும்.** இணைச்செயலர் பேராசிரியை மரகதம் சிவானந்தம் நன்றி உரைத்திடக் கூட்டம் நிறைவுபெற்றது.

பேராசிரியர் **துரை. சுந்தர மூர்த்தி**
செயலர், பழனிக்கிளை

## PUDUKKOTTAI UNIT

General body assembled on 10/3/19 around 10 A.M. President M. Srikumar was in the chair. On behalf of the unit Prof.Santhosh babu adorned Prof. M.Srikumar with a shawl and wished him a very happy birth day. After that secretary briefed the general body about the happenings at the state executive meeting on 25/2/19. A three member committee met the additional treasury officer on 12/3/19.

He assured that the revised pension along with the arrears will be paid in this month(march). The resolutions adopted were,

1) Birthday greetings to professors M Srikumar, S S Sheik Mohammed and S Palaniappan (Chemistry).
2) World women's day greetings to all the women members.
3) Heart felt condolences to the family members of the jawans who laid their lives for the country at Pulwama.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



4) It is hereby requested that the 7 persons convicted in the Rajiv Gandhi murder may please be released at the earliest.

The meeting concluded with a vote of thanks.

## KUMBAKONAM UNIT

This unit of Kumbakonam, met on 9th March, 2019, the second Saturday of this month in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakomam, by 5.30, in the evening. Prof C.Rajasekaran, president of the unit chaired. It was the annual meet of the unit. Auditor Sri N.Sathish was the chief guest. Prof C.Rajasekaran, welcomed and offered the shawl and the memento to the chief guest. The chief guest clarified the doubts raised by our members regarding income tax.. Members enjoyed the Annual Dinner . The credit goes to Prof. V. Sivakumaran who had taken pains to fix Ganesh of Neelaa Narayanan Catering Service for the purpose. We suppose that all the members might have submitted their authori- zation to the Sub-Treasury Officer for the monthly recovery of the income - tax for the F.Y. 2019 - 2020. The following members celebrate their birthday in this month of March. Prof. M.Gnanasekaran, Prof. R.Paatabiraman , Prof. Dr. T.Manoharan , Prof Dr. K.Kumar and Prof. Dr. D. Kanakarajan. We wish them all a happy birthday. We once again remind our unit members to remit the subscription for the year 2018 - 2019. The subscription may be sent to the unit through NEFT. For NEFT it may be addressed to NAME: TAMILNADU RETIRED COLLEGE TEACHERS' ASSOCIATION - KUMBAKONAM BRANCH, Bank : CITY UNION BANK KUMBAKONAM TOWN BRANCH, 35/14, KAMATCHI JOSIER STREET, KUMBAKO- NAM; Account No.003 001 000 385 359; IFSCode:CIUB0000003 MICR Code: 612 054 003; Type of Account: Savings Account. E mail: cub003@cityunionbank.in. After remitting, kindly intimate the remittance to Dr.D.Sukumar (cell: 9443874528) and Dr.S.Thirunavukkarasau (cell: 9443704147 ). Kindly ignore this if it had already been paid. We request all the members to pay their subscription for the year 2019 - 2020. Next April monthly meeting will be held on 13th April, 2019, the second Saturday, ; in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening. We express our hearty greetings to the members on *தெலுங்கு மற்றும் கன்னடப்புத்தாண்டான யுகாதித்திருநாள்* on 6th April, 2019. . We wish our members a happy Vishu 2019. Well in advance ***பேராசிரியப்பெருமக்கள் அனைவருக்கும் இனிய விகாரி***

**தமிழ்ப்புத்தாண்டுதின வாழ்த்துக்கள்.** Prof. Dr.C.Mani, Vice President of the unit delivered vote of thanks.

Dr.D.Sukumar,
Secretary, Kumbakonam Unit of TANRECTA

## தஞ்சாவூர் கிளை

எமது கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 10.03.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு தஞ்சை மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் நடைபெற்றது. கிளைத்தலைவர் பேரா.P.குமாரவேலு அவர்கள் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தினார். கிளைப்பொருளாளர் பேரா.ஆ. இராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

மார்ச் திங்கள் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் M.S.கோவிந்தசாமி, Dr.G.கோவிந்தராஜ், Dr.S.கோவிந்தன், P.கிருஷ்ணமூர்த்தி, P.செல்லையன், E.சுப்புரமன், T.காந்தி, Dr.A.மூர்த்தி, R.சந்திரசேகரன், P.கல்யாணராமன் மற்றும் திருமதி.வள்ளி ஆகியோருக்கு கிளையின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. வந்திருந்த அனைத்து உறுப்பினர்களுக்கும், பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் Dr.G.கோவிந்தராஜ், Dr.S.கோவிந்தன் மற்றும் வீ.காந்தி இனிப்பு காரம் வழங்கி சிறப்பித்தனர். அவர்களுக்கு கிளையின் சார்பாக நன்றி கூறப்பட்டது.

கிளைச்செயலாளர் முனைவர்.வே.இராமசாமி தனது உரையில் 25.02.2019 அன்று திருச்சியில் நடந்த மாநிலச் செயற்குழுவின் முடிவுகளை உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டார். அரசு உதவிபெறும் கல்லூரிகளில் ரூ.14,940/- உயர் ஊதியம் வழங்கப்படாமல் இருப்பது, இதில் தலைமைக்கழகத்தின் தொடர் நடவடிக்கைகள், புதிய ஓய்வூதியத்திருத்தம் தொடர்பாக பயனுள்ள வகையில் Concordant Table பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பற்றி விளக்கினார்.

புதிய ஓய்வூதியம் பெறுவதற்கு விண்ணப்பித்த நமது கிளை உறுப்பினர்களாகிய ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் அனைவருக்கும் புதிய ஓய்வூதியம் அமுல்படுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சியுடன் தெரிவிக்கப்பட்டது. இதில் மாவட்ட கருவூலர் திரு.S.சோமசுந்தரம் மற்றும் அவரது அலுவலகத்தாரின் ஒத்துழைப்பு நன்றியுடன் நினைவுக்கூறப்பட்டது.

கிளையின் மூத்த உறுப்பினர் பேரா.அ.வெங்கடேஸ்வரன் அவர்கள் சமீபத்திய தனது லண்டன் பயணம் பற்றிய செய்திகளை உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டார். கல்வித்திட்டத்தில் பிள்ளைகளுக்கு உள்ள சுதந்திரம், மக்களின் சட்டத்தை மதிக்கும் பண்பு ஆகியவற்றை சிறப்பாகக் குறிப்பிட்டார்.

12.01.2018 அன்று நடைபெற்ற ஆண்டு சிறப்புக் கூட்டத்தின் வரவு செலவுக் கணக்கு பொதுக்குழுவில் வைக்கப்பட்டு பொதுக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



இறுதியில் கிளைச் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**அடுத்த பொதுக்குழுக் கூட்டம் 13.04.2019 இரண்டாவது சனிக்கிழமை, காலை 10.30 மணிக்கு மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் நடைபெறும்** என உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கலாகிறது.

தீர்மானங்கள்:

1) TANRECTA வின் பத்தொன்பதாவது மாநில மாநாட்டை தஞ்சையில் நடத்த தஞ்சைக் கிளை தயாராக உள்ளது. அதற்கு அனுமதி வழங்குமாறு தலைமைக் கழகத்தைக் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

2) இனி வருங்காலங்களில் கிளையின் பொதுக்குழுக் கூட்டங்களை மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**பேரா. வே. இராமசாமி**
கிளைச்செயலர்

## தூத்துக்குடி கிளை

எமது கிளையின மார்ச் மாதக் கூட்டம் 12.03.2019 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளையின்; தலைவர்; முனைவர்; T. ஆனந்த வேதா தலைமை தாங்கினார்.

துணைத் தலைவர் பேராசிரியர் P. அலக்சான்டர் கனகராஜ் வரவேற்புரை ஆற்றினார். 25.2.2019 திங்கட்கிழமை திருச்சியில் நடைபெற்ற TANRECTA மாநில செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட கிளையின் செயலர் ம. கமல்ராஜ் அங்கு விவாதிக்கப்பட்ட கருத்துக்களை உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டார். இணைச் செயலர் பேராசிரியர் M.J. இன்பநாயகம் நமது சங்கத்தின் முன்னேற்றத்திற்கான வழி முறைகளை விளக்கி கூறினார்.

கடந்த சில வருடங்களாக சந்தா தொகை செலுத்தாத பேராசிரியர் M. சார்லஸ்(20) பொது கூழுவின் ஒப்புதலோடு சங்கத்திலிருந்து நீக்கப்பட்டார். பேராசிரியர் மோசஸ் கோவிந்த நாராயனர் அனைவருக்கும் தேநீர் மற்றும் சிற்றூண்டி வழங்கினார்.

15.3.2019 அன்று எமது மூத்த உறுப்பினர் பேராசிரியர் P.J.அருள் தாஸ் (வயது 83) அவரது இல்லத்தில் (ஆறுமுகநேரி) காலமானார். அன்னாரது நல்லடக்கம் 17.3.2019 அன்று நடைபெற்றது. அதில் எமது உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதுவரை இவ்வாண்டு சந்தா தொகை தராதவர்களின் இல்லங்களுக்கு பொது குழு உறுப்பினர் பேரா. S. இம்மானுவேல் அவர்கள் தலைமையில் சென்று வசூலிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

**கிளையின் ஏப்ரல் மாதக் கூட்டம் 9.4.2019 இரண்டாம் செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C.எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.** பொதுக்குழு உறுப்பினர் பேரா. R.சொக்கலிங்கம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் முறையே ரூ.400/- (நானூறு) செலுத்தாதவர்கள் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Account No: 505561496; Indian Bank, Melur Branch, Tuticorin

IFSC Code: IDIB000M083 A/C Name. Tamilnadu Retired College Teacher's Association, Thuthukudi.

**பேரா.ம. கமல்ராஜ்**
செயலர், தூத்துக்குடி கிளை
செல் : 9442306905

## PARAMATHI -VELUR UNIT
## MARCH, 2019 REPORT

The meeting of the General Body was held on 9th March 2019 at 6.30 PM at Hotel South Indian Residency, P. Velur under the chairmanship of Dr. R. Subramaniam, the Chairman of the unit. He explained in detail about the pending issues of the members and family pensioners regarding the revision of pension for the retirees before 2006, the fixation of the pension for the recently retired six members of our unit. He also informed that the central General Secretary and his team are working to get the revised concordance table for all the retirees from 1.1.2006 to 1.1.2016 for all categories of staff like lecturers, Senior scale, selection grade, associate professors etc. He also informed that the processing of the fixation of revised pension for 35 members is under process.

The secretary who attended the State Executive meeting explained in detail about the receipt of the revised pension for the 15 units of Govt. Colleges, amendments to the constitution of AIFRUCTO, and the steps to be taken for those whose service registers are unavailable at the office of the JD Dharmapuri, the steps taken to the retirees of aided colleges regarding the fixation of revised pension on the basis of Rs. 14940. The secretary also reminded the members regarding the dues to be paid towards central subscription, Building Fund etc. He also informed the members that the venue of the next Annual Conference is



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



Thanjavur and requested the members to support the organizers of the annual conference through advertisements and donations liberally.

Dr. K. Chandrasekaran, treasurer explained the financial position of the unit and suggested to improve through additional contribution by the members. The members spoke at length regarding the amount of contribution and suggested to fix the amount in the next meeting. Our senior member Prof. M. Dhandapani (Chemistry) met with an accident while he was walking on the college road and suffered due to severe damage to his toe. All the members prayed the almighty for the speedy recovery and normalcy in his day to day affairs.

In the month of March, Prof. C. Loganathan and Prof. N Samban celebrated their birth day and Prof. M Dhandapani(chemistry) , Prof. M. Chandrakesan and Dr. A. Shanmugasundram celebrated their wedding day. All the members congratulated them with a big round of applause and thanked the above professors for hosting the dinner for the members present.

Prof. N. Samban, the Vice President proposed the vote of thanks and the meeting came to an end. The members were informed that the next general body meeting will be held on 13th April, 2019 at the same venue and at the same time.

**Dr. T.P.J. BHARATHI,**
Unit Secretary

**விருதுநகர் கிளை**

விருதுநகர் கிளையின் பொதுக்குழு கூட்டம் 09.03.2019 முற்பகல் 11.00 மணியளவில் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் கிளைத்தலைவர் முனைவர் N.இன்பமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் தலைவர் வரவேற்று தலைமையுரையாற்றினார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இம்மாதம் பிறந்தநாள் காணும் நமது கிளையின் உறுப்பினர்கள் 20 பேரின் பெயர்களை கிளை துணைத் தலைவர் பேரா. S. கருப்பையா அவர்கள் வாசிக்க கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.
2. AIFRUCTO பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட நமது கிளையின் உறுப்பினர் பேரா. K. பொன்னம்மாள் அவர்களை இக்கிளை வாழ்த்தி பாராட்டுகிறது.
3. AIFRUCTO தேர்தலில் வெற்றிபெற்ற பொதுச்செயலாளர் Dr.B.பார்த்தசாரதி செயலர் Dr.T.N. கோகுல்நாத் பாபு, மண்ட செயலர் Dr.V.சுவாமிநாதன்

ஆகியோருக்கு TANRECTA விருதுநகர் கிளை அதன் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

4. கடந்த நிதியாண்டு (2018 19) நமது கிளை உறுப்பினர்கள் எல்லோரும் தங்களது சந்தாவை முழுவதுமாக செலுத்தி கிளைக்கு பெருமை சேர்த்தது போல இந்த நிதியாண்டும் (2019 20) தங்களது சந்தாவை ரூ 500 தாமதமின்றி செலுத்தி கிளைக்கு பெருமை சேர்க்க வேண்டுமென்று உறுப்பினர்களை இக்கிளை அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறது.
5. ஆயுள் சந்தா ரூ 1000/- மற்றும் செய்திமடல் சந்தா ரூ 300/- செலுத்தி AFRUCTO ஆயுள் உறுப்பினராக தங்களை இணைத்துக் கொண்ட கீழ்க்கண்ட உறுப்பினரை இக்கிளை நன்றி பாராட்டி வரவேற்கிறது. சென்ற மாத தொடர்ச்சி...... 161 Dr.S. பானுமதி..... தொடரும்.
6. ஓய்வூதியர் அனைவருக்கும் பயன்பெறும் வகையில் ஒருConcordance Table,UCG-ல் இருந்து பெற AIFRUCTO மற்றும் AIFUCTO சேர்ந்து எடுத்துவரும் கூட்டு முயற்சிக்கு இக்கிளை நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.
7. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் நல்லதொரு சுவையான மதிய விருந்தினை அளித்த Dr. P.N கமலா அவர்களுக்கு இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
8. 2019 ஏப்ரல் மாத கிளை கூட்டத்திற்கு வருகை தரும் அனைத்து உறுப்பினர்களுக்கும் மதிய விருந்து வழங்க இசைந்து பேரா. R. ஜெயராமன் பேரா. ஆவுடைத்தாய் ஜெயராமன் தம்பதியர் விடுத்த அழைப்பினை இக்கிளை அன்புடன் ஏற்றுக் கொள்கிறது.
9. பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் பொருட்களின் பயன்பாட்டை குறைக்கும் நோக்கத்தில், கிளை உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கு ரூ 3000/ மதிப்புள்ள 36 எவர்சில்வர் தட்டு மற்றும் 10 டம்ளர்களை நன்கொடையாக அளித்த கிளைத் தலைவர் Dr.N இன்பமணி அவர்களை இக்கிளை வாழ்த்தி நன்றி பாராட்டுகிறது.

பேரா M. சந்திரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**அடுத்த மாதக் கூட்டம் 13.04.2019 இரண்டாம் சனிக்கிழமை அன்று முற்பகல் 11 மணிக்கு விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா இராமசாமி நாடார் திருமண அரங்கில் நடைபெறும்.**

பேராசிரியர் **வி. ஹரிராஜன்**
செயலர், விருதுநகர் கிளை



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**கோவை நீலகிரி கிளை**

09.03.2019 இரண்டாம் சனிக்கிழமை, கோவை அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் மாலை 4.30 க்கு கிளையின் தலைவர் Dr.M. சக்ரபாணி தலைமையில் நடைபெற்றது.

**இரங்கல் தீர்மானம்**

காஷ்மீரில் தீவிரவாதிகளின் திடீர் தாக்குதலில் இருவர் இன்னுயிர் நீத்த நமது துணை ராணுவத்தார்க்கும் P.S.G.R கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் வேதியியல் துறையில் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்ற Dr.W.T. ஜானகி அவர்களின் மறைவிற்கும், கோவை அரசு கல்லூரியில் உளவியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேரா.V. நடராஜன் மறைவிற்கும் இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இக்கிளையின் மேனாள் துணைத் தலைவர் பேரா.T.நளினி அவர்கள், தம்மேனாள் வேதியியல் துறை தலைவர் Dr.W.T. ஜானகி அவர்களின் சிறப்புத் தன்மைகளை எடுத்துரைத்தார்.

அடுத்து, இக்கிளையில் 80 அகவை முடிக்கப்பெற்ற கல்வியியல் கல்லூரி பேராசிரியர்கள், திருமதி தனலட்சுமி சக்கரபாணி, மற்றும் அதே கல்லூரியின் பேரா. திருமதி நிர்மலா தேவி இருவருக்கும் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டனர். இவர்களுடன், C.B.M கல்லூரி, மேனாள் துறை தலைவர் Dr.M. ஆறுமுகத்திற்கு, தமிழக அரசு **தமிழ்ச் செம்மல் விருது** வழங்கி பாராட்டு செய்தமையை வாழ்த்தி பொன்னாடை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து கிளையின் துணைச் செயலர் குரு.சங்கமேஸ்வரன் இத்திங்களில் பிறந்தநாள் கண்டுள்ள 32 உறுப்பினர்களின் பெயர்களைக் கூறி அவர்கள் எல்லோரும் நீண்ட ஆயுளையும், நல்ல ஆரோக்கியமும் பெற்று வாழ இறையருளை வேண்டி மற்ற உறுப்பினர்களின் சார்பாகவும், கிளையின் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்தார். பிறந்தநாள் கண்ட பேராசிரியர்கள் Dr. சந்திரசேகரன், Dr.P.S. சுப்பிரமணியன், Dr.K. முரளிதரன், பேரா. தனலட்சுமி சக்கரபாணி, பேரா.T.நளினி, பேரா.S.பாலசுந்தரம், பேரா. R. தங்கபாண்டியன், பேரா.K.P. அய்யாசாமி மற்றும் பேரா.C. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், வந்திருந்த அனைத்து 65 உறுப்பினர்களுக்கும் அடையாறு ஆனந்த பவன் இனிப்பு, காரம் நல்கி தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

கடைசியாக கிளையின் செயலாளர் பேரா.S பாலசுப்பிர'மணியன் அவர்கள், இனியும் U.G.C. நிலுவைத்தொகையும், புதிய ஓய்வு தியம் பெறாத உறுப்பினர்களுக்கு, தொடர்ந்து கருவூல அதிகாரியை சந்தித்து, பெற்று தர எடுக்கின்ற முயற்சிகளை தெரிவித்தார். மற்றும் 2018-19 ஆண்டுக்கான சந்தா தொகையையும், 2019-20க்கான சந்தாத் தொகையையும் வழங்கும் படி வேண்டுகோள் விடுத்தார். மற்றும் கூட்டத்திற்கு வந்தவர்களுக்கும் இனிப்பு

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



வழங்கிய நல் உள்ளங்களுக்கு நன்றி கூறி, **அடுத்த ஏப்ரல் திங்கள் கூட்டம் 13-04-2019 இரண்டாம் சனிக்கிழமை அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெறும்** என்ற தகவலை தெரிவிக்கப்பட்டு, கூட்டம் இனிதே நடந்து முடிந்தது.

**குரு.சங்கமேஸ்வரன்,**

கோவை-நீலகிரி கிளை, துணைச் செயலர்.

**தருமபுரி கிளை**

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழக தருமபுரி கிளையின் 2019 மார்ச் மாதக் கூட்டம் தருமபுரி ஸ்ரீ ராமாலாட்ஜில் 9.3.19 சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு மாநில பொதுச் செயலர் பேரா. E.P. பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளை செயலர் பேரா. G. சின்னப்பையன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

கல்லூரியிலும், கருவூலத்திலும் அடிக்கடி சென்று சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொதுச் செயலர் தெரிவித்தார். மேலும் Anticipated Income Tax Form அடுத்த மாதாந்திரக் கூட்டத்தில் கொடுப்பதாக செயலர் தெரிவித்தார். இறுதியாக சிற்றுண்டிக்குப் பிறகு பேரா. R. செலையன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவுற்றது.

**அடுத்த மாதாந்திரக் கூட்டம் 13.4.19 சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு தருமபுரி ஸ்ரீ ராமாலாட்ஜில் நடைபெறும்.**

**பேரா. G. சின்னப்பையன்**

செயலர், தருமபுரி கிளை

**சிதம்பரம் கிளை**

கிளையின் மாதாந்திரக் கூட்டம் 09-3-2019 காலை 10:30 மணிக்கு தொடங்கி நடந்தது. செயலர் அனைவரையும் வணங்கி வரவேற்றார். இம்மாதம் பிறந்தநாள் கண்ட உறுப்பினர்களுக்கு (க.இளங்கோவன் பேரா.கே. பரந்தாமன் முனைவர் ஆர். கனகசபை) பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. ஓர் அரிய ஒற்றுமையாக செயலர் இளங்கோவனின் பிறந்த நாள் மார்ச் 9 தான். முனைவர் ஆர். கனகசபை அவர்கள் தற்போது மயிலாடுதுறை கிளையில் உறுப்பினராக இருந்தும் தன் பிறந்தநாளை சிதம்பரம் கிளையில் கொண்டாட விரும்பியது ஒரு சிறப்பு. இணைச் செயலாளர் அப்துல் ரஹீம் அவர்கள் திருச்சியில் 25.02.2019 நடந்த மாநில செயற்குழு கூட்டத்தில் பங்கேற்றார். அந்நிகழ்வுகளை விளக்கிக் கூறினார். முக்கியமாக பல கிளைகளில் உறுப்பினர் கட்டணம் பல ஆண்டுகளாக நிலுவை உள்ளதால் TANRECTA செய்திமடல் அச்சடித்தல், அனுப்புதல் மிகவும் நெருக்கடியான கட்டத்தில் உள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டது என்ற தகவலைத் தந்தார். விருதுநகர் கிளையில் அத்தகைய நிலுவைகளின்றி இருப்பதாக பாராட்டப்பட்டதாகக் கூறினார். 2018-19 மட்டுமின்றி





பல ஆண்டுகளாக உறுப்பினர் கட்டணம் நிலுவை இல்லாமல் இருக்கும் நமது கிளையைப் பாராட்டத் தவறியதைச் சுட்டிக்காட்டியதாகக் கூறினார். இதற்கு முன்னர் நடந்த ஒரு மாநில செயற்குழு கூட்டத்தில் செயலர் இளங்கோவன் பங்கேற்றபோதும் ஏன் பாராட்டவில்லை என்று வினவியதைச் சுட்டிக்காட்டினார். நமக்கு நாமே திட்டம் போல் நம்மை நாமே பாராட்டி கொள்ள வேண்டியது தான் போலும் என செயலர் நொந்தார். G.o. 145ன் படி ஓய்வூதியத் திருத்தம் மற்றும் நிலுவை தொகை பெற்ற 15 கிளைகளுள் நமது கிளையும் ஒன்று. 2019 - 20 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியர் உறுப்பினர் கட்டணம் ரூ.500ம் குடும்ப ஓய்வூதியர்களுக்கு ரூ.400ம் ஆகும். வழக்கப்படி உறுப்பினர்கள் விரைந்து அனுப்பி உதவுமாறும் நிலுவையில்லாக் கிளை எனும் பெருமைக்கு காரணமான உறுப்பினர்களுக்கு செயலர் நன்றியும் பாராட்டினார் WhatsAppல் தகவல் அனுப்பிய மறுநாள் நடந்த கூட்டத்திலேயே பதினாறு (16) உறுப்பினர்கள் தங்கள் கட்டணத்தை செலுத்தியது போற்றுதலுக்குரியது.

தமிழ்நாடு அரசு PENSIONERS PORTAL எனும் ஓர் APPஐ தொடங்கியுள்ளது. இதில் நுழைய ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு Password உருவாக்கி பதிவு செய்து கொண்டால் Ecs status, computation, additional pension, PENSIONER DETAILS, PENSIONER ID CARD பெற விவரங்கள் போன்றவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நமது உறுப்பினர்கள் பலருக்கு இது செய்யப்பட்டுவிட்டது. தொடர்ந்து மற்றவர்கட்கும் செய்யப்படும். கணினி வைத்துள்ள உறுப்பினர்கள் தாங்களே செய்து கொண்டதாகக் கூறினார். வரும் ஆண்டிற்கான வருமான வரி பிடித்தம் செய்ய கருவூலத்திற்கு தரவேண்டிய கணக்கீடு படிவம் தயார் செய்யப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. 2019 20 ஆம் ஆண்டிற்கான வருமான வரி அறிக்கையில் 5 லட்சம் ரூபாய் வரையில் “No Tax” என்பது வார்த்தை ஜாலம் ஏமாற்று வேலை என்று கூட கூறலாம். 2006 க்குப் பின்னும் 2016க்கு முன்னும் ஓய்வு பெற்றோருக்கு தெளிவான READY RECKONER வராதது அவர்களிடையே ஏமாற்ற உணர்வை உண்டாக்கியுள்ளது. சிலருக்கு அச்ச உணர்வும் உள்ளது. விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தலைமைக் கழகத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அமரர் K.T.R அவர்களின் மனைவிக்கு குறைவான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி திருத்தம் செய்யப்பட்டது. அமரர் T.P கலிய பெருமாள் அவர்கள் இறந்த பின்னர் அவருக்கும் திருத்தப்பட்ட ஓய்வூதிய நிலுவைத் தொகை அவர் இறந்தநாள் வரை வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இம்மாதத்தில் செயல்படுத்தப்படும்.

கடந்த 50 நாட்களுக்கு முன் சாலை விபத்தில் காயமடைந்து திருச்சியில் சிகிச்சை பெற்று வரும் விருத்தாசலம் பேரா. சுந்தர மூர்த்தி (வேதியியல் துறை)

அவர்களைக் காவேரி மருத்துவமனை சென்று நலம் விசாரித்து வந்ததைச் செயலர் தெரிவித்துக் கொள்கிறார். நினைவாற்றல் குறைந்த நிலையில் உள்ள அவர் விரைந்து குணமடைய இறைவனை இறைஞ்சப்படுகிறது. பேரா. எஸ். மணி அவர்களும் செயலருடன் சென்று நலம் விசாரித்தார்.

உறுப்பினர் கட்டணத்தை NEFT மூலமாகவும் TANRECTA CHIDAMBARAM, UNION BANK OF INDIA
A/C. No. 629802010012267
IFSC CODE UBIN0562980 அனுப்பலாம்.

**அடுத்த கூட்டம் 2019-20 ஆம் ஆண்டின் முதல் கூட்டம் (12.4.2019 வெள்ளிக்கிழமை) என்பதனால் உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்க்கைத் துணையுடன் அல்லது ஓர் குடும்ப உறுப்பினருடன் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.**

பேரா. **க. இளங்கோவன்,**
செயலர், சிதம்பரம் கிளை.

## MAYILADUTHURAI UNIT

TANRECTA meeting was conducted on Sunday the 10th March 2019 at 10A.M. in Arivalayam Matriculation School, Mayiladuthurai. Income Tax forms were distributed to all the members

Prof.R.Gnanasekaran welcomed the gathering. Dr.Thilagavathi was kind enough to be the host. Dr.M.Tamilarasan proposed the vote of thanks.

The following resolution was unanimously passed in the meeting.

Resolved to collect Rs.1000/ (Rs. 500/for Tanrecta Speaks and Rs.500/ for Narasngam Endowment) from each member.

**Our next meeting will be held on 07/4/2019 instead of second Sunday of the month.**

**Prof.S.Murugesan**
Secretary, Mayiladuthurai

## திருவாரூர் - நாகை கிளை

திருவாரூர் நாகை கிளையின் பொதுக்குழு கூட்டம் 19.03.2019 அன்று மாலை 6.30 மணிக்கு கிளைத்தலைவர் பேரா. R. நாராயணசாமி அவர்கள் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. கிளைத்தலைவர் அனைவரையும் வரவேற்று தலைமையுரை ஆற்றினார்.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



25.02.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகள், விவாதிக்கப்பட்ட கருத்துக்கள் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி கிளைச் செயலர் பேரா. சி. கனகசுந்தரம் எடுத்துரைத்தார். மாநில ஆட்சிக் குழுவும், கிளைப் பொருப்பாளர்களும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைக்குப் பிறகு 40 சதவிகிதம் உறுப்பினர்களே ஓய்வூதியத் திருத்தம், நிலுவையும் பெற்றுள்ளனர் என்ற விபரம் தெரிவிக்கப்பட்டது. மற்ற உறுப்பினர்களக்கு பயன் கிடைத்திட முயற்சி தொடர்கிறது. அவசியம் ஏற்படில் 31.03.2019 க்கு பிறகு நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவது என்ற தலைமை கழகத்தின் முடிவை கிளை வரவேற்கிறது.

2018-19 ம் ஆண்டுக்கு சந்தா செலுத்தாத உறுப்பினர்களின் பட்டியலை 2019, ஏப்ரல் முதல் வாரத்தில் மாநிலப் பொதுச் செயலருக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

இது வரை பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதி ரூ. 500, கழக வளர்ச்சி நிதி ரூ. 500, கட்டிட நிதி ரூ. 5000 செலுத்தாத உறுப்பினர்கள் அவற்றை விரைவில் செலுத்துமாறு வேண்டுகோள் விடப்பட்டது.

மார்ச் 7,8 தேதிகளில் கோல்காபூரில் நடைபெற்ற AIFRUCTO மாநாடு நிகழ்வுகள் பற்றி மாநிலப் பொருளாளர் பேரா.M. பாலசுப்பிரமணியன் எடுத்துரைத்தார்.

ஈரோட்டில் நடைபெற்ற மாநில மாநாட்டை சிறப்பாக நடத்தியதுடன் தாமதமின்றி கணக்குகளை சமர்பித்து ரூ. 1,00,000 க்கு மேல் மிச்சப் படுத்தி சாதனை புரிந்துள்ள ஈரோடு கிளைப் பொறுப்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இன்றைய சிந்தனை என்ற தலைப்பில் கிளை உறுப்பினர் பேரா. எஸ். வெங்கட்ராஜிலு அவர்கள் வாழ்வியல் தத்துவங்கள் பற்றி உரையாற்றினார். அவரது கருத்தாழம் மிக்க உரையை அனைவரும் பாராட்டினர்.

மார்ச் மாதத்தில் பிறந்த நாள் காணும் பேரா.C. நாராயணசாமி அவர்கள் அனைவருக்கும் சுவையான சிற்றுண்டி வழங்கினார். அன்னார்க்கு அனைவரும் பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

பேரா. A. தணிகாசலம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**சி. கனகசுந்தரம்**
கிளைச் செயலர். திருவாரூர் கிளை